5-6

அமுதவாக்கு

திரு முருக

கிருபானந்தவாரியார்

தமிழ்ப்பண்ணை

Mithran

அமுதவாக்கு

அருள்மொழி அரசு
திருமுருக
கிருபானந்தவாரியார்

தமிழ்ப் பண்ணை
தியாகராய நகரம்,
சென்னை-17.

முதற் பதிப்பு: நவம்பர், 1964.
இரண்டாம் பதிப்பு: ஜூலை, 1966.
மூன்றும் பதிப்பு: செப்டம்பர், 1969.

விலை ரூ. 1-50

முல்லை அச்சகம், சென்னை-14.

பதிப்புரை

மனம் இருக்கின்றவனிடத்தில்தான் மானம் இருக்கும். அந்த மானம் உள்ளவனிடத்தில்தான் மனிதத் தன்மையும் இருக்கும்.

இஃது போலத்தான் அன்புள்ள இடத்தில் அருளும், அருளுள்ள இடத்தில் அறனும், அறனுள்ள இடத்தில் பக்தியும் இருக்கும்.

இதற்கு இந்த நூற்றூண்டில் எடுத்துக்காட்டாக இருப்பவர்தான் நம் மதிப்பிற்குரிய திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்.

அவர் வாய்திறந்தால் போதும்; மடைதிறந்த வெள்ளம் போல் தமிழ்த்தேன் பெருக்கெடுத்தோடும். அதிலே மூழ்கிவிட்ட தமிழ்ப் பெருங்குடி மக்கள் எல்லாம் மெய்ம்மறந்து போவர்.

பேச்சில் மட்டுமல்ல; எழுத்திலும் அப்படித்தான்.

அவர் பேச்சிலும், எழுத்திலும் ஊடாடும் தமிழ் மொழியின் வளத்தைப் பார்க்கும்போது, 'வாரியார் அவர்களிடம் தமிழ் தஞ்சம் புகுந்திருக்கிறதா? அல்லது வாரியார்தான் தமிழிடம் தஞ்சம் புகுந்துவிட்டாரா?' என்ற சந்தேகம் எனக்கு எழுவதுண்டு.

அவர் வாக்கிலே

அருள் மணக்கும்; அருந்தமிழ் பா மணக்கும்.
அறமிருக்கும்; அங்கே உயர்ந்த தரமிருக்கும்.
அன்பிருக்கும்; அரிய பண்பும் சேர்ந்திருக்கும்.
பணிவிருக்கும்; பக்தி நெறியும் கூடவிருக்கும்.

இனிமை இருக்கும்; எளிமை இருக்கும்.
கடமை உண்டு; கருணைபொழியும் கண்களுண்டு.
கனிவிருக்கும்; கன்னித் தமிழ் மொழி இருக்கும்.

இத்தனையும் மொத்தமாக இருக்கும். நம் வாரியார் தமிழ் கூறும் நல்லுலகுக்குக் கிடைத்திருக்கும் ஓர் ஒப்புயர்வற்ற கருவூலம்!

அவர் தந்திருக்கிறார் "அமுத வாக்கு!"

அமுதம் யாருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. கிடைத்தற்கரிய ஓர் அரிய பொருள் அது. அது நமக்குக் கிடைத்திருக்கிறது.

கிடைத்த அமுதத்தை பணிந்து, இரு கரமேந்தி, பெற்று மகிழ்வோமாக.

வாழ்க வாரியார் அவர்கள் !

வளர்க அவர்தம் அமுதவாக்கு !!

சென்னை–17,
1—11—64.

அன்பன்
சின்ன அண்ணமலை

அமுதவாக்கு

பெரியவர்கள் வாக்கில் அமிர்தம் உண்டு. அதனுல் அவர்கள் கூறிய சொல் அமிர்தமாகி அருள் புரியும். "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பது பழமொழி. இந்த வாக்கில்தான் எத்தனை ஆழம்! இதனை விளக்குவது இது.

புல் குடிசை; தெற்குப் பார்த்திருந்தது. தோட்டத்தில் வாழைகளும் இரண்டு தென்னைகளும் ஒற்றுமையாக நின்றிருந்தன. தரை மட்டத்தில் ஒரு சிறு கிணறு. அதன் அருகில் கரிய பானைகள் கவிழ்க்கப்பட்டிருந்தன, தோட்டத்தில் பனை மட்டைகள் வேலியாக நின்று போர்வீரர்களைப் போல் அந்தக் குடிசைக்கு அரண் செய்தன.

அந்தக் குடிசையில் எலிக்குஞ்சுகளும் வறுமையுடன் வாழ்ந்தன. தெருப்பக்கம் ஒரு சன்னல்! இதில் ஒரு கதவு பாதி நைந்து ஒடிந்திருந்தது. அந்த வீட்டின் பழமைக்கு அது சான்று இதழ் போல் காட்சியளித்தது.

முத்துசாமி என்பவன் அந்தச் சன்னல் ஓரத்தில் உட்கார்ந்து நெசவு வேலை செய்துகொண்டிருப்பான். வறுமையின் சிறுமையால் அதிகாலையிலேயே தன் வேலையைத் தொடங்குவான். பகல் பன்னிரண்டு மணிக்குத் தறியை விட்டு இறங்கி வந்து, கேழ்வரகுக் கூழ் குடிப்பான். அதற்கு ஊறுகாய்கூடக் கிடையாது. உலர்ந்த மிளகாய் வற்றலைக் கிள்ளி, அதில் இரு உப்புக்கல்லை வைத்து வாயில் போட்டு மெல்லுவான். கண்ணில் நீர் துளிர்க்கும். அந்தக் காரத்தில் அந்த ஆகாரம் மடமட வென்று வயிற்றுக்குள் நுழைந்துவிடும்.

கையலம்பிக்கொண்டு அந்த ஈரம் உலர்வதற்குள் தறிக்குள் சென்று நெய்வான். நன்றாக இருட்டிய பின் தான் அதை விட்டு வருவான்.

ஊர்க்கோடியில் உள்ள ஏரிக்கரையில் சரீர உபாதையை நீக்கிவிட்டு வருகின்ற வழியில் பிள்ளையாரைக் கும்பிட்டு வந்து, மனைவி கொடுத்த உணவைத் தேவாமிர்தமாகச் சாப்பிட்டுவிட்டு அயர்ந்து படுத்துவிடுவான்.

இப்படி அன்றாடம் அவன் உழைப்பான். அப்படி உழைத்தும் அரை வயிறுதான். இந்தத் தரித்திர நிலையில் அவனுக்கு மூன்று பெண் குழந்தைகளும் நான்கு ஆண் குழந்தைகளும் பிறந்தன.

அந்த ஊரில் அவர்களின் குலகுரு வந்து எல்லோருக்கும் தீட்சை கொடுத்து உபதேசம் செய்தார்.

முத்துசாமி மட்டும் அதில் கலந்துகொள்ளவில்லை. அவனுண்டு, அவனுடைய வேலையுண்டு என்று இருந்தான்.

அவனுடைய மனைவி வந்தாள். ''நம் குருமகான் வந்து எல்லோருக்கும் உபதேசம் செய்து வைக்கிறார், நீங்களும் போய்ச் செய்துகொள்ளுங்களேன். இந்தச் சந்தர்ப்பம் போனால் நமக்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்காது'' என்று சொன்னாள்.

''போடி! நம் பிழைப்பு எட்டிப் பார்த்தால் எட்டிழை குறையும். உண்டானவனுக்குத்தான் தீட்சையும் தெய்வமும். வறுமைப்பேய் நம் வீட்டில் வாசம் புரிகிறதே. தீட்சை வாங்கிக்கொண்டால், பக்தி சிரத்தையாக இருந்து அரை மணி நேரமாகிலும் அநுஷ்டானம் செய்ய வேண்டும். எனக்கு நேரம் ஏது?''

''ஐந்து நிமிஷ நேரமாவது சுவாமியை நினைக்க வேண்டாமா? பல் விளக்க நேரம் இருக்கிறது. மலஜலம் கழிக்க நேரமிருக்கிறது. உண்ணவும் உறங்கவும் நேரம் இருக்கிறது. இதில் ஐந்து நிமிஷம் அநுஷ்டானம் பண்ண மட்டும் நேரம் இல்லை என்றால், இது பொருந்துமா? மனம் இருந்தால் நேரமும் இருக்கும்!''

இவ்வாறு மனைவி சொன்னதைக் கேட்ட முத்துசாமி, சரி என்று தறியை விட்டு இறங்கி, மேல் துண்டை எடுத்துக்கொண்டு நேரே குருநாதர் உள்ள இடத்திற்குச் சென்றான். அவரை வீழ்ந்து வணங்கினான்.

''முத்துசாமி! சுகமாக இரு! எங்கே, இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லையே! அயலூருக்குப் போயிருந் தாயோ?'' என்று கேட்டார் குருநாதர்.

''சுவாமி! அடியேனுக்கு அதிக வேலை. தீட்சை வாங்கிக்கொண்டால் தினம் குளிக்கவேண்டும். அநுஷ் டானம் செய்ய வேண்டும். வெகு சிரமமான வேலை. அடி யேன் ஏழை. நெசவு ஜீவனம். எனக்குத் தக்கவாறு சுருக்க மாக உபதேசம் செய்து வைக்கவேண்டும்.''

''அப்பா! முத்துசாமி! எழுந்தவுடன் தந்த சுத்தி செய்து, முகத்தில் திருநீறு இட்டுக்கொண்டு பத்து முறை பஞ்சாட்சரம் சொல்லிவிட்டு அப்புறம் உணவைச் சாப் பிடு. இது போதும். உனக்கு நல்லருள் கிடைக்கும்.''

''சுவாமி! இதை விடவும் சுலபமான உபதேசம் கிடையாதா?'' என்று கேட்டான் முத்துசாமி.

குருநாதர் புன்னகை புரிந்தார். 'அந்தோ! பஞ்சாட் சரம் பத்து முறை கூறக்கூட நேரம் இல்லையாம். இது என்ன உலகம்!'

''அப்பா! திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த பிறகுதான் ஆகாரம் சாப்பிடுவது என்ற ஒரு கொள்கை யையாவது வைத்துக்கொள்'' என்று அருளினார் குருநாதர்.

இதற்கு முத்துசாமி இணங்கினான். ஏன்? அவனு டைய பக்கத்து வீடு ஒரு குயவனுடையது. அந்தக்

குயவஞர் திருநீலகண்டரைப் போன்ற பரமசிவ பக்தர். நெற்றியில் எப்போதும் வெண்ணீறு தரித்துக்கொண்டிருப்பார். அவர் யாசகப் பொடி வாங்க அடிக்கடி இவனுடைய சன்னல் பக்கம் வருவார். அதஞல்தான் முத்துசாமி குருநாதரிடம் இந்தக் 'கடின'மான ஒரு நிபந்தனைக்கு உட்பட்டான்.

இதன்படியே இவன் தறியில் இருந்து நெய்யும்போது அந்தக் குயவஞர் சன்னல் பக்கம் வந்து பொடி கேட்பார். திருநீறு பூசிய அவருடைய முகத்தைப் பாாத்தவுடனே மனேவியைக் கூப்பிட்டுக் கூழ் கரைக்கச் சொல்லி, தறியில் இருந்தபடியே சாப்பிட்டுவிடுவான். நெசவு வேலேயில் கண்ணுங்கருத்துமாக இருந்து பஞ்சு படாத பாடுபட்டு அந்தக் குடும்பத்தை அவன் பாதுகாத்து வந்தான்.

ஒரு நாள் குயவஞருக்கு வீதியில் ஓர் அஞ கிடைத்தது. அதற்கு அவர் பொடி வாங்கிக்கொண்டார். அதஞல் அவர் இவனிடம் பொடி வாங்க வரவில்லே.

இவன் துடியாய்த் துடித்தான். கடும் பசி காதை அடைக்கின்றது. பகல் மணி பன்னிரண்டு. உச்சி வேளே. மனேவி மேல் சீறிவிழுந்தான். "உபதேசம் செய்து கொள்ளச் சொல்லி என்னேச் செல்லரித்தாள். அந்தக் குயவன் இன்று எங்கே செத்தாஞே? வந்து தொலேயவில்லே. வயிறு கிள்ளுகின்றது. என்ன செய்வேன்?" என்று கூறி அங்கலாய்த்துக்கொண்டான்.

"போய் அவர் வீட்டில்தான் பார்த்துவிட்டு வாருங்களேன்" என்ருள் மனேவி.

''சரி'' என்று நாடாவைத் தறிமேல் வைத்துவிட்டு எழுந்து, ஆடையைச் சரிப்படுத்திக்கொண்டு, அடுத்த வீட்டுக்கு ஓடினுன், அந்த வேளை குயவனுர் களிமண் எடுக்கும் பொருட்டு ஏரிக்குச் சென்றிருந்தார். முத்து சாமிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. ''பாவிப்பயல்! இந்த நேரம் பார்த்துப் போக வேண்டுமா? வேறு வழி யில்லை'' என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாக ஏரிக் கரைக்கே ஓடினுன்.

அங்கே ஒரு பெரிய பள்ளம். அதில் குயவனுர் மண் வெட்டி எடுக்கும்போது இரண்டு தங்கக் குடங்கள் இருந்தன, 'கணீர்' என்ற ஒலியுண்டாயிற்று. யாராவது பார்த்துவிட்டால் துன்பமாயிற்றே என்று மேலே நிமிர்ந்து பார்த்தார்.

முத்துசாமி அந்த நேரத்தில் ''பார்த்துவிட்டேன்'' என்று கூறிவிட்டுப் பிடித்தான் ஓட்டம். ஆனுல், அவன் தங்கக்குடத்தைப் பார்க்கவில்லை. விபூதி முகத்தைத்தான் பார்த்தான். வீட்டையடைந்து கூழ் குடித்துவிட்டுத் தறிக்குள் நுழைந்துகொண்டான்.

குயவனுர் பதைத்துப் போனுர்! 'இவன் ஓடி மணியக் காரருக்கோ, கணக்குப் பிள்ளைக்கோ சொல்லவிட்டால் அரசாங்கம் இதனைப் பறிமுதல் செய்யுமே! கடவுளே! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகுமே!' என்று அஞ்சினுர்.

இரு தங்கக் குடங்களையும் வண்டியில் வைத்து மேலே வைக்கோலை மூடி, வேகமாக வண்டியை ஓட்டிக் கொண்டு வீட்டிற்குள் கொணர்ந்து மறைத்து வைத்தார்.

முத்துசாமியின் மனைவியைக் கூப்பிட்டு, ''அம்மா! ஏரியில் மண் எடுக்கும்போது இரு தங்கக் குடங்கள் கிடைத்தன. உன் கணவன் பார்த்துவிட்டு 'பார்த்து விட்டேன்!' என்று சொல்லிவிட்டு ஓடினான். அரசாங்க அதிகாரிகளிடம் சொல்லத்தான் ஓடினானோ, என்னவோ! நீயும் ஏழை, நானும் ஏழை. ஆளுக்கு ஒரு குடம் எடுத்துக் கொள்வோம். உன் கணவனிடம் சொல்லி இதை வெளிப் படுத்த வேண்டாம் என்று சொல். இந்தா, ஒரு குடம். நீ கொண்டு போ'' என்று கொடுத்துவிட்டார்.

'பழம் புடைவையால் மூடி, அவள் அதனைப் புறக் கடை வழியாகக் கொணர்ந்து சமையல் அறைக்குள் வைத்தாள். கணவனிடம் வந்தாள்.

''நீங்கள் ஏரிக்குப் போனீர்களே, என்ன பார்த் தீர்கள்?''

''உன் தலை! உன்னால்தான் இந்தச் சங்கடம். குயவனுடைய திருநீற்றைத்தான் பார்த்தேன்.'' கணவனை அழைத்துக்கொண்டு போய், தங்கக் குடத்தைக் காட்டி னாள். அதன் மூடியைத் திறந்தவுடன் அதில் மஞ்சளாக ஆயிரம் தங்க டாலர்கள் இருந்தன.

''பார்த்தீர்களா! வெறும் திருநீறு பூசிய திருமுகத் தைப் பார்த்த ஒரு நன்மையின் காரணமாக இந்த நலம் எய்தியது. நீங்களே திரு நீறுபூசி வழிபாடு செய்தால் இகபர நலன்கள் எய்துமே! 'நீறில்லா நெற்றி பாழ்,' என் கின்றார் ஔவையார். ஆதலால் சைவர்கள் திருநீறும், வைணவர்கள் திருநாமமும் இட்டுக்கொள்ள வேண்டும்.

நெற்றிக்கு இட்டுக்கொள்வதனுல் எத்தனையோ நலன்கள் எய்தும். இது நம் பாரதநாட்டுப் பண்பு. ஆன்ருேர் அமுத வாக்கு'' என்ருள்.

அன்று முதல் முத்துசாமி முறையே ஆசார அநுஷ்டானங்களை மேற்கொண்டு திருநீறு பூசித் தெய்வமணம் கமழச் சிறந்து விளங்கினுன்!

அன்னதானம்

உலகத்தில் மக்கள் மோக்ஷ வீடு சேர்வதற்குச் சாதனமாக இருந்து உபசரிப்பது அறம் ஒன்றேயாம். நாம் சம்பாதித்த பொருள் இந்த ஜென்மத்தில் மட்டும் உதவி செய்யும். நாம் செய்த அறமோ மறுமைக்கும் வந்து உதவி செய்யும்.

"பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்காயினும் வரும்ஏற்பவர்க் கிட்டது இடாமல் வைத்த
வங்கார ரமுழங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடுவீ ருயிர்போமத் தனிவழிக்கே"

என்று நம் பரமாசாரிய மூர்த்திகளாகிய அருணகிரிநாத சுவாமிகள் உபதேசித்துள்ளார். எத்தேசத்தில், எக் குலத்தில், எந்தப் பிறப்பில் பிறந்தாலும் நாம் இப்பொழுது இங்கு செய்த அறம் பின்தொடர்ந்து வரும். அதனாலன்றோ ஔவைப்பிராட்டியார் நமக்கு உபதேசிக்க வந்த போது முதலில் "அறஞ்செய விரும்பு" என்று வற்புறுத்தி

யுள்ளார். அந்த அறமாவது பல திறப்பட்டுள்ளது! அவற்றில் தானம் தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. இந்த இருவகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திரதானம், கன்னிகா தானம், சுவர்ணதானம் எனப் பல கிளைகளுண்டு. இவற்றுள் தலைசிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றேயாம். இதனை எல்லாச் சமயத்தவரும் எத்திறப்பட்டோரும், சங்கை இன்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு சமானமானது முன்னுமில்லை, பின்னுமில்லை. எதனால் அன்னதானம் உயர்ந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

உயிரானது கிருத யுகத்தில் எலும்புகளைப்பற்றி இருந்தது; திரேதா யுகத்தில் மாமிசத்தைப்பற்றி இருந்தது; துவாபர யுகத்தில் இரத்தத்தைப்பற்றி இருந்தது; கலியுகத்தில் அன்னத்தைப்பற்றி இருக்கிறது.

> "க்ருதே த்வஸ்தி கதா : ப்ராணா : த்ரேதாயாம் மாம்ஸ
> மாஸ்ரிதா:
> த்வாபரே ருதிரே சைவக லௌத்வன் னுதி வுஸ்திதா:
> —ஸ்மிருதி முக்தா பலம்

ஆதலால் உயிர்கள் அன்னத்தைத்தான் முக்கிய ஆகாரமாகக் கொண்டு வாழ்கின்றன. பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும்,

குஷ்டம், க்ஷயம், சூலை முதலிய எத்துணை கொடிய நோய் ஒருவனுக்கு வந்து பிடித்தாலும், சில காலமாவது உயிர் வாழலாம். பசி என்கிற கொடிய நோய் ஒருவனுக்கு வந்து சேர்ந்ததானால் சிறிது நேரமாவது உயிர்

வாழ முடியுமா? பசிநோய் வந்த காலத்து எவ்வளவு சிரமம் உண்டாகிறது! அன்பர்களே! உற்று நோக்குங் கள். கண் பஞ்சடைகிறது, காதடைக்கின்றது, தலை சுற்றுகிறது, வயிறு ஒட்டிப்போகிறது. கால்கள் தடுமாறு கின்றன. அகக் கருவிகளாகிய மனம் சோர்வடைகிறது. புத்தி தடுமாறுகிறது, உயிர் துடிக்கிறது; கருவி கரணங் களெல்லாம் தத்தஞ் செயல்களினின்றுந் தவிர்கின்றன வல்லவா? அத்தகைய கொடிய பசியை ஆற்றுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் மூன்று உலகத்திலும் கிடையா தென்பது நிச்சயம். பசியென்னும் நோயை அன்னம் என்கிற மருந்தைக் கொடுத்து நீக்க வேண்டும். பசியால் களைத்து வந்தவனுக்குச் சிறிது அன்னங்கொடுக்க, அதை அருந்தினவுடனே அவன் முகம் எவ்வளவு பொலிவடை கிறது! மனம் எவ்வளவு ஆனந்தத்தையடைகிறது! ஆத்மா எவ்வளவு சாந்தியடைகிறது! உற்று நோக்குங் கள். அப்போது அன்னம் கொடுத்தவனுக்கு எவ்வளவு புண்ணியம் உண்டாகிறது! அன்பர்களே! பசியாற்று வதைக் காட்டிலும் சிறந்த தவம் வேறு இல்லை.

ஒருவனுக்குப் பசிப்பிணி வந்தபோது, நான் போய் ஒருவரை ஒன்றுங் கேட்கமாட்டேன். 'ஏற்பதிகழ்ச்சி' என்று சொல்லிக்கொண்டிருந்த மானமும் நீங்குகிறது. நான் உயர்ந்த குலம், ஆசாரத்திற் சிறந்தவன், அவன் தாழ்ந்தவன், என்று பாராட்டுகிற குலமும் நீங்குகிறது; கல்வி கேள்விகளிற் சிறந்து நுண்ணிய மதியுடன் திகழ் கின்றோரது கல்வியறிவும் மங்குகிறது; காண்பார்களது கண்களைக் கவரும் கட்டழகும் குன்றுகிறது; பொருளுடை யோன் என்கிற பெருமிதமும் பெயர்கிறது; தானம்

புரிகின்ற தன்மையுந் தவிர்கிறது; உயர்ச்சியும் ஒழிகிறது; தேன் போன்ற இனிய சொற்களையுடைய மாதர்மேல் மனத்தை வைத்துக் கங்குல் பகலாய்க் கண்துஞ்சாது கலங்குகின்ற காம வேட்கையும் கடிதில் விலகுகிறது.

"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்.

—ஔவைப் பிராட்டியார்.

மெய்யன்புடையீர்!

பசி இன்னும் என்னென்ன விபரீதங்களை யுண்டு பண்ணுகிறது. அரிதிற் பெற்ற பிள்ளையை விற்கச் செய்கிறது. தவமிருந்து பெற்ற பிள்ளையைத் தூக்கிக் கல்லின் மேலறையச் செய்கிறது. கடந்த ஞானிகளாகக் காட்டிலிருந்து கருத்தை யொடுக்கிக் கனலிடை நின்று கடுந் தவமியற்றும் முனிவர்களையுங்கூடக் காயோ கனியோ கந்தமுலங்களோ, இலையோ சருகோ கிடைக்குமா என்று தேடி உண்ணச் செய்கிறது. முற்றுந் துறந்தவரையும் வீடுதேடிப் பிச்சை வாங்கச் செய்கிறது. விரதமுங் கிடையாது, பலமும் கிடையாது என்று விரத நாளினுங்கூட முன்று வேளை தலையணைக்குப் பஞ்சடைகிற மாதிரி வயிற்றில் சோற்றைத் திணிக்கச் செய்கிறது. விரதமிருக்கிறவர்களைப் பல ஆகாரங்களாகப் பழமாகப் பாலாக வயிறு புடைக்க உண்ணச் செய்கிறது. சிவபெருமானால் உபதேசிக்கப்பெற்ற பட்டினத்தடிகளும் பசியால் வாடி

ஒருவன் வீட்டிற்கு உணவை நாடிச் செல்ல, அவன் சுவாமிகளைத் துன்புறுத்த அக்கால சுவாமிகள் மனம் வருந்தி,

"பூணும் படிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தை கெட்டு
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே."

என்று கூறியுள்ளார். அருணகிரி சுவாமிகளும் "நீள் பசிய விக்கக் கனபானம் வேணும்" என்றனர். வேறொரு வழியின்றிப் பசி தாகத்தால் மெலிந்தவர்களை அன்போடும் அருளோடும் அன்ன மீந்து ஆதரிக்கவேண்டும். நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அது ஒன்றுக்கு ஆயிரமாக விளைகிறதல்லவா? அது போல் ஏழைகள் வயிற்றில் கொடுத்த அன்னம் மறுமைக்கு ஆயிர மடங்காக விருத்தி யடைந்து நமக்கு நன்மையை நல்குகிறது. சென்ற வருடத்தில் விளைவித்த தானியத்தையல்லவா இப்போது உண்ணுகிறோம். அது போல முன் ஜென்மத்தில் செய்த நன்மையினால் நாம் இப்போது சுகத்தை அனுபவிக்கிறோம். இப்போதும் நன்றாகப் பயிரிட்டு விளைவித்தாலல்லவா அடுத்த வருடத்தில் கவலையற்றிருக்கலாம்? இப்போது நாம் நன்மையைச் செய்தாலல்லவா மறு ஜென்மத்தில் சுகம் பெறலாம்? நாம் எவ்வளவோ பாடுபட்டுச் செல்வத்தைத் தேடுகிறோம். அங்ஙனம் உடல் வருந்திச் சேகரித்த பொருளை இவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் போகலாமா? அந்தச் செல்வத்தை நல்ல சேம நிதி நிலையத்தில் (பண்டாபீஸ்) போட்டு வைத்தால் நாம் போன இடத்

திற்கு அது உதவுமல்லவா? இப்போது நாம் தேடிய பொருளைச் சேமித்து வைக்கவேண்டிய இடம் யாது? எங்கு வைத்தால் ஒன்றுக்கு ஆயிரமாக வரும்? என்று ஆராய்ந்து பார்த்தால் அடியார்கள், ஏழைகள் வயிறுதான் நல்ல சேம நிதி நிலையம் (பண்டாபீஸ்). அதற்குத் தலைவர் தரும தேவதை. அது எப்பொழுதும் கெடாது. ஆனால் ஏழைகள் வயிற்றில் பணமாகப் போட முடியுமா? முடியாது. பின்னர் என்ன செய்ய வேண்டும்? அன்னமாக மாற்றிப் போட வேண்டும். அப்படிப் போட்டு வைத்தால் அது ஜென்மங் கள்தோறும தொடர்ந்துகொண்டே வரும். இப்போது ஒருவன் சுகமாக இருக்கிறான். அவனைக் கண்டு நாம் என்ன சொல்லுகிறோம். "கொடுத்து வைத்தவன்" என் கிறோமல்லவா? எங்கு கொடுத்து வைத்தான். அடியார் களுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்து அவர்கள் வயிற்றில் வைத்தான்; அது இப்போது வந்து சேருகிறது. எந்த வேலையும் செய்யாமல் சுக ஜீவியாயிருக்கிறான். பல வேலை செய்தும் கால் வயிறு கஞ்சிகூடக் கிடைக்காமல் சிலர் துன்புறுகிறார்கள். என்ன காரணம்? முன் ஜென்மத்தில் அறஞ் செய்யாதவர்களல்லவா? இவைகளை எல்லாம் நோக்கியே தெய்வப் புலவர்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆத்ம திருப்தியை யுண்டுபண்ணுவது அன்னதானம் ஒன்றேயாம். இத் தகைய சிறந்த அன்னதானத்தைச் செய்து அரச செல் வத்தை யடைந்த ஒருவரது வரலாற்றை விளக்குவாம்.

வடநாட்டில் ஒரு சிற்றூரில் தரும குணமே ஓர் வடிவெடுத்தாற் போன்ற ஓர் அம்மையார் இருந்தார். அவ்வம்மையார் தன் வீடு தேடி வந்தவர்களுக்கு எவ்வாற்ருனும் பசியாற்றுவதையே முக்கிய அறமாகக்கொண்டனர். நாயகன் வானுடு புகுந்தபின் ஆண்மகன் ஒருவனுடன் வாழ்ந்திருந்தார். பரோபகார சிந்தையுடைய அப்பணிமொழியம்மையார் மிடி யென்னும் பகையினுல் வருந்தினுர். என் செய்வார் பாவம்; வருகிற அகதிகளுக்கு அன்னங் கொடுப்பதற்கு என் செய்வேனென்று ஏங்கினுர். வேறு வழி யின்மையால் பிச்சையெடுத்தாவது வந்தவர்கள் பசியாற்றுவேனென்று எண்ணினுர். (திருமங்கை மன்னர் வழிபறித்தும் அன்னதானம் புரிந்தாரல்லவா?) இவ்வாறு உன்னிய அம்மாது சிரோன்மணி ஐயமேற்பாராயினுர். அதனுல் வரும் அரிசியை அமுதாக்கி ஏழைகளது பசி நோயை நீக்கினுர். வறியோர்களது பசியையாற்றுவதையே உடம்பெடுத்ததன் பயனுக எண்ணினுர். எளியவர்க்குக் கொடுத்து மிகுந்த அன்னத்தை மகனும் தானும் உண்டு பசியாறுவார்.

அவ்வம்மையாரது குமாரன் அன்னேயை நோக்கி, "அம்மா, தாங்கள் ஒவ்வொரு நாளும் உடல் வருந்தி, பிச்சையெடுத்து வருகிற அரிசி முழுவதையும் சமைத்துப் பசித்தவர் புசிக்கத் தருகிருயே, கொஞ்சம் எடுத்து மிகுதி செய்து வைத்தால் பிற்காலத்திலாவது, நோய்வாய்ப் பட்ட காலத்திற்காவது உதவுமல்லவா?" என்று கூறினுன். அம்மையார், "குழந்தாய், சாவதானமாகக் கேள். நமக்கு என்று சேர்கிற பொருள் நம்முடையதாக ஆகாது. பிறருக்கென்று கொடுத்ததுதான் நம்முடைய

தாக ஆகும். வறியவர்கள் வயிறுதான் பெரிய நிலம். நமக்குக கிடைக்கிற பொருள் முழுவதையும் ஏழைகள் வயிற்றில் வைக்க வேண்டும். வீட்டில் வைத்தால் கள்ளர்கள் அபகரித்துக்கொள்வார்கள்; வீட்டில் வைத் தால் அது அதிகமாகவும் பெருகாது; அகதிகளுக்குத் தருகிற எந்த ஒரு பொருளுண்டோ அதை ஒருவரும் அபகரிக்க முடியாது. ஒன்றுக்கு ஆயிரமாக வளரும். பட்சிகளாவது மிருகங்களாவது நாளைக்கு வேண்டுமென்று சேமித்து வைக்கின்றனவா? அவை எப்போதாவது நாளைக்கு என்செய்வோமென்று நெஞ்சம் கவல்கின் றனவா? கல்லுக்குள் இருக்கிற தேரைக்கும் கருப்பையி னுள் இருக்கிற சிசுவுக்கும் உணவு தந்து காப்பாற்றுகிற கருணுமூர்த்தியாகிய கடவுள் உருப்பெற்ற நம்மைமட்டுங் காவாதொழிவனே? மகனே, பசியாற்றுவதைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு கிடையாது. இதை எக்காலத்திலும் மறவாதே; எனக்குப் பிறகு இதை இடைவிடாது அனுஷ் டிப்பாய்'' என்று கூறினுர்.

அப்பொன்மொழிகளைக் கேட்ட குமாரன், தாயை நோக்கி, ''அன்னையே! 'தாய் சொற்றுறந்தால் வாசக மில்லை' என்பதை நான் நன்ருக உணர்ந்திருக்கிறேன். நின் சொல்லே வேத மொழியாகும். அந்த அன்ன தானத்தின் பலனை விளக்கமாகக் கூறவேண்டும்!'' என்றனன். அன்னை, ''மைந்த, அன்னதானத்தின் பலனை என்னுற் கூறுந் தரமுடையதன்று. ஆரண் யத்தில் தவமியற்றும் அருந்தவ அடிகளைச் சென்று வினவி யுணர்வாயாக'' என்றனள். உடனே குமாரன் தாயை நமஸ்கரித்து, ''வனஞ்சென்று முனிவர்களை

யடுத்துக் கேட்டுத் தெரிந்து வருகிறேன், விடை தருவாய்'' என்றனன். அன்னை மகனைத் தனித்து வனத்திற்கனுப்ப அஞ்சினாளெனினும், அன்னதானத்தின் பலனைத் தெரிந்துகொள்வது அவசியமென்று நினைத்து, ''அருமைக் கண்மணியே, அங்ஙனமே சென்று, அருந்தவ முனிவரை யண்டி, சந்தேகந் தெளிந்து வருவாய்; நினக்கு வழியில் இன்னலின்றி இறைவன் காத்தருள்வான்'' என்று ஆசி கூறியனுப்பினாள்.

அந்த இளங்குமாரன் தாயாரை மும்முறை வணங்கி, அவளது பூரணமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு வனம் புகுந்தான். நடுக்காட்டை யடைந்தான். கதிரவன் மேற்கடல் மூழ்கினான்.

இருள் சூழ்ந்தது. எங்கும் மிருகங்களின் ஒலியாக இருந்தது. தாயாரின் வார்த்தையை உன்னி, தனயன் இறைவன் நம்மைக் காத்து இன்னருள் புரிவானென்று சிவநாமத்தை யுரைத்துக்கொண்டே சென்றான். கங்குலானபடியால் எங்கு தங்குவதென்று அறியாது இடர்ப்பட்டான். அக்கால் அங்கோர் பரண் புலப்பட்டது. (பரண் என்பது மிருக பயத்திற்காகப் பூமிக்குமேல் உயரமாகக் கட்டப்பட்டிருப்பது) அதனருகே சென்றான். அப்பரணில் ஒரு வேடன் தன் பத்தினியுடன் வாழ்ந்துகொண்டிருந்தான். பகலெல்லாம் வேட்டையாடி இரவுக்கு வேண்டிய உணவைத் தேடி, மிருக பயத்தினால் அதன்மீது அவன் பத்தினியுடன் நித்திரை புரிவது வழக்கம். பரண்மீதிருந்த வேடன்

பரணை நாடி வருகிற இளங்குமரனைக் கண்ணுற்று இறும்பூதுற்ருன். 'மிருகங்கள் சஞ்சரிக்கும் இப்பெருங் கானகத்தில் போதுபட்ட இந்தச் சமயத்தில் இங்கு வருகிற இந்த இளமகன் யாவனே? வினவுவோம்' என்று நினைத்து, பரணை விட்டுக் கீழே இறங்கி, அந்தக் குமரனை எடுத்து அணைத்து, "குழந்தாய், என்னே நின் மனத்துணிவு? ஆயுதபாணிகளும் பகலில் இவ்விடம் வர அஞ்சுவார்களே, நீயோ இளம் பிள்ளை. இரவு வந்த இந்தச் சமயத்தில் இக்காட்டகத்திற்கு எதைக் கருதி நண்ணிஞய்? மிருகங்கள் உன்னை உபத்திரவம் புரியவில்லையா? எவ்வாறு துஷ்ட மிருகங்களினின்று நீ தப்பித்துக்கொண்டு வந்தாய்? நின் உறைவிடம் யாது? அறிய விரும்புகிறேன். நின்னைப் பார்க்க என் மனம் பரிதவிக்கிறது. விரைவிற் பகருதி" என்றனன்.

அது கேட்ட குமாரன், "ஐய, நினது பரிவுக்கு மிகவும் மகிழ்கிறேன். புலன்களை யடக்கி நலம்பெறத் தவமியற்றும் மாதவரைக் காண வந்தேன். தாய்போற் பரிந்து தமர்போற் உபசரிக்கும் தயாளுவாகிய நின்னைக் கண்டு இன்னல் தீர்ந்தேன்" என்றனன். வேடன், "குழந்தாய், சந்தோஷம்; நின் வரவு நல் வரவு ஆகுக. எங்களோடு நீயும் இருந்து இந்த இரவை இனிது கழிப்பாய்" என்று தனக்கும் தன் பத்தினிக்கும் வைத்திருந்த உணவை மூன்று கூருக ஆக்கி அப்பிள்ளைக்கு ஒரு பங்கைக் கொடுக்க எத்தனம்புரிகையில் அவ்வேடன் பத்தினியாகிய வேட்டுவ மாது, மிகவுஞ் சினங்கொண்டு, "வந்தவனுக்காக என் உணவிற் குறைத்துக்கொள்ள

மாட்டேன்; இரண்டாகப் பகிர்ந்து என் பங்கை எனக்குக் கொடுத்துவிட்டு, உன் பங்கை இஷ்டமிருந்தால் அவனுக்குக் கொடு'' என்று கூறினாள். வேடன் 'அங்ஙனமே யாகுக' என்று அந்த உணவை இரண்டாகப் பகிர்ந்து ஒரு பாகத்தைப் பத்தினிக்குக் கொடுத்துவிட்டுத் தன் பாகத்தை அந்தக் குமாரனுக்குப் பரிவோடு கொடுத்தான். பசித்திருந்த அந்தப் பிள்ளை வேடனால் தரப்பட்ட தேனையுந் தினைமாவையும் நெருப்பில் சுட்ட காட்டுக் கிழங்கையும் உண்டு உள்ளங் களித்தனன். வேடன் மூன்று கை ஜலம் பருகி உபவாசியா யிருந்தான்.

பின்னர், வேடன் ''அப்பா! கீழே படுத்தால் மிருகங்கள் கொன்றுவிடும்; இப்பரண்மீது ஏறிப் படுப்பாய்'' என்று அச் சிறுவனைப் பரண்மீதேற்றி, தனக்கும் தன் பத்தினிக்கும் மத்தியில் படுக்க வைத்தான். வேடன் மனைவி அதுகண்டு கோபித்து, ''இவன் என் பக்கத்தில் படுக்கக்கூடாது; பாதியிடத்தை எனக்குக் கொடுத்துவிட்டு மற்றைப் பாதியிடத்தில் அவனும் நீயும் படுத்துக்கொள்!'' என்றாள். வேடன் அவளது துர்க் குணத்தை நினைத்து நெஞ்சம் புண்ணாகி, பாதியிடத்திலே பத்தினி பக்கத்திற் றான்படுத்துக்கொண்டு சிறுவனை ஓரத்திற் படுக்க வைத்து, தூக்கத்தில் விழாவண்ணம், சிறுவனைக் கரத்தால் அணைத்துக்கொண்டு, தூங்காது விழித்துக்கொண்டிருந்தான். வேடன் மனைவியும் சிறுவனும் தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியாயிற்று; வேடன் தன் பத்தினி தூங்கிவிட்டதைப் பார்த்து, அச் சிறுவனை நடுவில் மெல்லப் படுக்க வைத்துவிட்டுத் தான் ஓரத்தில் படுத்து நித்திரை செய்தான். வேடப்

பெண் நித்திரை தெளிந்தாள். எங்கிருந்தோ வந்த பையனுக்குத் தன் உணவைக் கொடுத்துவிட்டு, தன் கணவன் பட்டினி கிடப்பதை நினைத்து, 'இந்தப் பையன் இருந்தால் நமக்கு இடைஞ்சல். இவனைக் கீழே தள்ளி விடவேண்டும்' என்று தீர்மானித்தாள்; இருளானபடியால் தன் சமீபத்தில் படுத்திருக்கிறது நாயகன்தான் என்று எண்ணி ஓரத்தில் படுத்திருந்த நாயகனை மெல்ல உருட்டிவிட்டாள். நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்த வேடன் கீழே விழுந்தான். பரணடியிற் காத்துக்கொண் டிருந்த மிருகங்கள் அவ்வுத்தமனுன வேடுவனை வாயில் போட்டுக்கொண்டன. வேடன் மனைவி 'நம்மைப் பிடித்த சனியன் தொலைந்தது' என்று உள்ளம் உவந்தாள்.

பொழுது புலர்ந்தது. குயில்கள் கூவின. வேட்டுவ மாது கண் விழித்து எழுந்தாள். தன் பக்கத்தில் சிறுவன் படுத்திருக்கக் கண்டு, "நம் பக்கத்தில் நாயகனல்லவா படுத்திருந்தான்! இச்சிறுவன் எப்படி நம் பக்கம் வந்தான்?" என்று அலறினுள். நம்முடைய கெடுமதி நம்மையே கெடுத்தது என்று கூக்குரலிட்டாள். சிறுவன் எழுந்து நிகழ்ந்ததை யுணர்ந்து உளம் வருந்தி "ஏ பாபி! உத்தமனுன வேடனைக் கொன்றனையே; என்னே நின் மூட மதி? சீ, உன் முகத்தில் விழித்தாலும் தீமை வரும்" என்று வெறுத்து, அங்கிருந்து புறப்பட்டு நீராடித் தவ முனி வரைத் தேடிக்கொண்டு செல்வானுயினுன். ஒரு தபோ வனத்தை யணுகினுன். குளிர்ந்த காற்றும், நறுமலர் வாடையும் மணல் மேடையும் இருக்கக் கண்டு அச் சோலையில் நுழைந்தான். ஆங்கோர் தாமரைத் தடாகக் கரையில் பர்ணசாலையில் சித்திரப் பதுமை போல் நின்று

தவம் புரியும் ஓர் முனிபுங்கவரைக் கண்டான். கண்ணுங் கருத்துங் களிகூர்ந்தான். கைகூப்பி நின்றுகொண்டிருந் தான்.

நெடுநேரத்திற்குப் பின் முனிவர் பகிர் முகப்பட்டார். கண் விழித்தார். எதிரில் அஞ்சலியஸ்தனுக நிற்கும் இளஞ்சிறுவனைக் கண்டார். ஆசி கூறினுர். வந்த காரணம் யாதென வினவினுர். சிறுவன் பெரியார் தாள்மீது வீழ்ந்து, "மாதவரே! அன்னதானத்தின் மகிமையைக் கூற வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தான். முனிவர் மகிழ்ந்து, "பிள்ளாய்! நின் கேள்வி மிகவும் அருமையானது; அதனை யான் கூறுதற்குச் சக்தியற்றவனுயுளேன். அன்னதானத்தின் பலனை நீ உணர்ந்துகொள்ள வேண்டுமென்று பெரிதும் விழைகிருய். ஆதலால் நீ காசி நகரத்தை யாளுகின்ற மன்னனுக்குப் பத்து மாதம் கழித்து காலை 6-மணிக்கு ஓர் ஆண் மகவு தோன்றப்போகிறது. நீ சென்று அக்குழந்தை பிறந்தவுடனே கைபடாமல் தங்கத் தட்டில் ஏந்தி இச்சந்தேகத்தை வினவுதி; அக்குழந்தை தெளிவாகக் கூறும். ஐயம் வேண்டாம். செல்லுதி" என்றனர்.

சிறுவன் அப்பெரியார் வார்த்தையைச் சிரமேற் கொண்டு மீண்டும் அவரை வணங்கி விடைபெற்றுக் காசியம்பதியை நண்ணி மன்னவன் மாப்பேரவைக்குச் சென்றனன். அச்சிறுவனை அரசன் வரவேற்று, "நீ எங்கிருந்து வருகிருய்? நின் விருப்பம் யாது? கூறுக!" என்றனன். குமாரன் "கொற்றவ! நினக்கு ஓர் ஆண் மகவு பிறக்கப்போகிறது," என்று அக்குழந்தை பிறக்கும் காலத்

தைக் குறிப்பிட்டான். மன்னன் கேட்டு வியப்புற்று, குழந்தை யுதிக்கும்வரை அச்சிறுவனுக்கு உணவு முதலியன தந்து உபசரித்து வந்தான்.

பின்னர் குறிப்பிட்ட காலத்தில் மன்னன் மனைவி ஓர் அழகிய ஆண்மகவைப் பெற்றனள். மன்னன் தாதிகளைக் கொண்டு கைப்படாமல் குழந்தையைத் தங்கத் தட்டில் ஏந்தி வந்தார்கள். பூரண சந்திரன் போல் அக்குழந்தையின் முகம் பொலிவுற்று விளங்கியது. முனிவர் அருளால் அக்குழந்தைக்குப் பூர்வஞானம் வந்தது. குழந்தை, வந்த சிறுவனை நோக்கிப் புன்முறுவல் கொண்டு, ''அப்பா! க்ஷேமமா? இங்கு எதை உத்தேசித்து வந்தாய்? நினக்கு யாது சந்தேகம்? விரைவில் கூறுக!'' என்றது. ஆண்டிருந்தோர் அனைவரும் பிறந்த குழந்தை பேசுவதைக் கண்டு பேராச்சரியம் அடைந்தனர். சிறுவனும் முன்பின் பார்த்தது போல் இக்குழந்தை குசலப்ரசனம் புரிகிறதே என்று வியப்புற்றுக் குழந்தையை நோக்கி, ''அன்னதானத்தின் பலனை அறைகுதி'' என்றனன்.

குழந்தை, ''அப்பா! நான் முன் ஜென்மத்தில் காட்டில் வேடனாக இருந்தேன். நீ என்னிடம் வந்தாய். நினக்கு இடந் தந்து நான் உண்ணுகின்ற அற்ப உணவை உனக்குத் தந்தேன். நீ உண்டு மகிழ்ந்தாய். பசிவந்த நினக்கு இத்தனை உணவு தந்ததின் பயன், தாழ்ந்த பிறப்பாகிய வேட சரீரம் நீங்கி, உத்தம குலத்தில் நல்ல க்ஷேத்திரத்தின் மன்னனுக்கு மகனாக, உலகம் அரசாளப் பிறந்தேன் என்றால் சதாகாலமும் பலருக்கு அன்னதானம்

புரிகின்ற நின் அன்னையின் பெருமையை யானோ உரைக்குந் தகுதியன்? எனக்கு அஃது எளிதோ? அன்ன தானத்தின் சிறப்பை நீயே ஆராய்ந்தறிக'' என்று கூறி வாய்மூடிற்று. அது கேட்ட மன்னன் முதலிய அனைவரும் அதிசயமுற்றனர்.

சிறுவன் அது கேட்டு அளவற்ற மகிழ்ச்சியை யடைந்தான். மன்னன் அச் சிறுவனை நோக்கி, ''மஹானுபாவா! நின்னால் நாங்கள் கேட்பதற்கு அருமையான அன்னதானத்தின் பலனைக் கேட்டு மகிழ்ந்தோம். ஆவி ஈடேறும் வழி அன்னதானமே என்று உணர்ந்தோம்'' என்று வேண்டிய தனத்தைத் தந்து ஓர் தேரிலேற்றி, தக்க துணையுடன் அவன் தாயிடம் அனுப்பினான். இவ்வளவு சிறப்புடன் சென்ற சிறுவன் தன் ஊர் சென்று தாயார் திருவடியில் வீழ்ந்து நிகழ்ந்தன யாவும் கூறினான். அவ்வுத்தமி கேட்டு மனமகிழ்ந்து மகன் கொணர்ந்த பெரிய தனங்களையெல்லாம் ஏழைகளுக்குப் பசியாற்றும் அன்னதானத்திலேயே செலவழித்து, மகனுடன் அன்ன தானத்தை இடைவிடாது புரிந்து இனிது வாழ்ந்தனள்.

தர்மம்

தர்மம் என்பது திரி என்ற தாதுவிலிருந்து பிறந்தது. திரி என்றால் காப்பாற்று; தர்மம், தரித்தல் ஆன்மாவைத் தரிக்குதல், அதாவது ஆன்மா நிம்மதியாகவிருக்கக்கூடிய விதம்! ஆன்ம லாபத்திற்கு உபாயம் தர்மம் எனப்படும். மானிடப்பிறவியின் கடமையை முடித்தலின் பெயர் தர்மம். தமது விஷயத்தில் தாம் செய்ய வேண்டியது கடமை, மாதா பிதாக்கள் விஷயத்தில் தாம் செய்ய வேண்டிய கடமை, பத்தினி விஷயமாயும், மக்கள் விஷயமாயும் தாம் செய்ய வேண்டிய கடமை, அயலார் விஷயமாயும், பந்துக்கள் விஷயமாயும், செய்ய வேண்டிய கடமை, ஏழைகள், தரித்திர திசையிலுள்ளோர், திக்கற்றவர், இவர்கள் விஷயமாய்ச் செய்ய வேண்டிய கடமை, ஸ்வதேசத்தைப்பற்றிச் செய்ய வேண்டிய கடமை இவையனைத்தையும் முடித்தலின் பெயர் தர்மம். தர்மத்தைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. தர்மம் மூன்று உலகத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது. தர்மம் எல்லா உயிர்களுக்கும் இனிமையானது; தர்மம் மண்ணுல

கம், விண்ணுலகம் இரண்டிலும் சுகத்தைக் கொடுக்கிறது; உலகம் நிலையற்றது; தர்மம் நிலைபெற்றது; தர்மத்தினால்தான் நற்கதியடைய முடியும்! தர்மம் இறைவனுடைய மூத்த குமாரனாகும். தர்மம் மோக்ஷ உலகத்திற்கு ஏணியைப் போன்றிருக்கிறது; தர்மத்தினால் பாபம் கெடுகின்றது. சுருதியில்,

தர்மேண பாபங்ததி என்றும், காஞ்சி புராணத்தில்,

அறமே மறங்கண் முழுதளிக்கு மறமே கடவுளுல கேற்றும்
அறமே சிவனுக்கொருவடிவ மாகுஞ் சிவனைவழிபடுவோர்க்
கறமே யெல்லாப்பெறும் பயனுமளிக்கும் யார்க்கும் எவ் [விடத்தும்
அறமே யச்சந்தவிர்ப்பதென வறைந்தான் சாதாத [பழனிவன்.

என்றும், விநாயக புராணத்தில்,

தேங்குவிண் போகமுஞ் சிறந்த முத்தியும்
ஈங்குறு மார்க்கமு மீனிறு நல்கலால்
ஓங்கிய வறத்தினை யுளமுன் மூன்றினும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால்

என்றும், திருக்கூவப் புராணத்தில்,

தருமமேயினை யில்பெரு டணியிடைத் தகைசால்
ஒருமை யன்பினை யுதவி விண்ணுலகினு முடன்போய்
அருமை இன்பமுய்த் தந்தகற் வெறுமெனி லறமே
இருமை யுந்துணை யாகுவ தன்றிமற் றில்லை

என்றும், கந்தபுராணத்தில்,

தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
ருமையி னின்பழ மெளிதி னுக்கு மால்
அருமையில் வரும்பொரு ளாகு மன்னதும்
ஒருமையி னேர்க்கலா லுணர்தற் கொண்ணுமோ

என்றும், நீதி சாஸ்திரத்தில்,

ஸர்வரீதி பகஸ்சந்த்ர: ப்ரபாதோத் திபகோரவ:
த்ரை லோக்யதிபகோ தர்மஸ்ஸீ புத்ர : குலதிபக :

என்றும் கூறப்பட்டுளது. ஆகவே தர்மத்தை யனுஷ்டித்தல் வேண்டும். தைத்திரியம், சிக்ஷாவல்லி 11-வது அறுவாகம் 1-வது வாக்கியத்தில்,

தர்மஞ்சர தர்-மாத்பரம் நாஸ்தி
ஸர்வேஷாம் பூதானும் மது!

ஆகவே ஒருபொழுதும் தர்மத்தைவிட்டு வழுவலாகாது. தர்ம மார்க்கத்தில் நடப்போமாயின் நமக்குச் சிரச்சேத முண்டாயினும் உண்மையான உயிர்ப்பைப் பெற்று அழிவற்ற பதவியை யடையவல்லோம்.

"தன்னைக் கொடுத்தாவது தர்மத்தைத் தேடவேண்டும்" என்று பெரியோர்கள் மொழிகின்றனர். இதனுல் தான் ஔவையும் "அறஞ்செய விரும்பு" என்றுள். தர்மானுஷ்டானமின்றி உள்ளம் பரிசுத்தமாவதில்லை; கடவுளுடைய அருளும் கிடைப்பதில்லை. மதங்கொண்டவன், அஜாக்கிரதையுடையவன், பித்தன், களைப்படைந்தவன், கோபத்தையுடையவன், பசித்தவன், அவசரக்காரன், லோபி, பயந்தவன், காமி இப்பதின்மரும் தர்மத்தை

யறிகிறதில்லே. ஆகவே இவர்களுடன் பழகாமல் தர்ம வழியில் நின்ற பெரியோர்களுடன் கூடி தர்மத்தைச் செய் வதற்கு முயல வேண்டும். தர்ம வழியாகவேதான் பணத தைச் சம்பாதிக்க வேண்டும்; தர்ம வழியில்லாமல் வரு பணம், இன்பம், புகழ் முதலியவைகள் பயன்பட மாட்டா.

சேது புராணத்தில்,

திருவு மின்பஞ் சிறப்பும் புகழுமற்
ருெருவ ராக்கலு நீக்கலு முள்ளவோ
மருவம் புண்ணிய மாந்தர்க் கவையெலாம்
தரும மின்றெளிற் ருமே சிதையு மால்

என்றனர். தர்மத்தின் வழியாக நடந்தால் யாவரும் துணே செய்வர். தர்மத்திற்கு விரோதமான வழியில் நடந்தால் உடன்பிறந்தவர்களும் துணே செய்யார். தாசரதி தர்மத்தின் பாலொழுக வேண்டுமென்று தன் அருமை யான நாட்டையும் துறந்து காட்டிற்குச் சென்ருர். அதனுல் அவருக்கு மிருகங்களும் துணே செய்தன. தசக்ரீவன் தர்மத்திற்கு விரோதமான வழிபில் சென்றதினுல் சகோ தரர்களும் துணே செய்யவில்லே. ஆகவே தர்மத்தின் வழியாகவே நடக்க வேண்டும். ஏழைகள் விஷயமாய் தர்மஞ் செய்ய வேண்டும். அந்தோ! கலிகாலத்தில் கிழிந்த துண்டையும் வறியோர்கட் கீவதற்கு மனம் வாராமல் கந்தை வஸ்திரத்தையுந் தந்து பாத்திரம் வாங்கு கிருர்கள். (இது என் அன்பிற்குரிய ஒருவர் வாங்கவுங் கண்டேன்) பசுவுக்காக அன்னப் பாலேயும் (கஞ்சி) தருவது கிடையாது; பசுவையுடையோர் கஞ்சியைக் கேட்டாலும்

'சாணம் தந்தால்தான் தருவோம்; சாணம் தருகின்றீர்களா?' என்று கேட்கிருர்கள். இவர்களே நோக்கித் தானே மாதாநுபங்கியும்,

ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவி னிளிவந்த தில்

மெய்யன்பர்களே! தர்மத்தின்பாலொழுகாததினுலல்லவோ பிற மதஸ்தர்களும் ஒப்புயர்வில்லாச் செப்பரும் நம் சைவ மதத்தை ஏளனமாகக் கருதி தூடணே செய்கிருர்கள். சைவ சமயத் தூடணஞ் செய்தால் நம்மை வலிந்தாட்கொள்ளும் தயாநிதியாகிய அறுமீன் காதலனே நிந்தித்தது போலல்லவோ? உலகத்தில் பெண்களுக்கு மாங்கல்யதாரணம் செய்தவன் நாயகன்; புருஷர்களாகிய நமக்கு நாயகன் வாகுலேயன். நம் கணவனுக்கு நிந்தையைத் தேடிவைக்கின்ருேம். நம் பதியை நிந்திக்கும்பொழுது செவிசாய்க்கின்ருேம். அதர்மம் என்ற வாளேக்கொண்டு தர்ம ஸ்வரூபியாகிய நம் பதியை வெட்டுகின்ருேம்! ஆ! இதுவா நமது கற்பு? நம் சைவ சமயத்திற்கு நிந்தையைத் தேடலாமா? தூஷிக்கும் பொழுது நாம் செவி சாய்க்கலாமா? நாம் தர்மத்தின் வழி நடக்காததினுலல்லவோ செவிசாய்க்க நேரிடுகிறது; ஆகவே தர்மவழியாகவே நடக்கவேண்டும். தானஞ்செய்ய வேண்டும். தானஞ்செய்யாமல் சாப்பிடக்கூடாது. தானஞ் செய்யாமல் தின்கின்றவன் விஷத்தை யுண்டவனுகிருன்!

"அஸ் நாதா சிமலம் பூங்தேஹய ஜப : பூய சோணிதம்
அஹுதாசி கிருமிம்புங் தேஹயதா விஷமஸ்நுத இதி "

—அத்திரி

(இ-ள்)—ஸ்நானஞ் செய்யாமல் சாப்பிடுகிறவன் மலத்தைத் தின்கின்றவனுகின்ருன்! ஜபஞ் செய்யாமல் புசித்தவன் இரத்தம் சீழ் புசித்தவனுகின்ருன்! ஓமம் செய் யாமல் புசித்தவன் புழுக்களை யுட்கொண்டவனுகின்ருன்! தானஞ்செய்யாமல் புசித்தவன் விஷத்தை யுண்டவ னுகிருன்! அத்திரி கூறுகின்ருர். ஆகவே ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும். "அஹிம்ஸா பரமோ தர்ம" ஹிம்சை என்ருல் தொந்தரவு, அஹிம்ஸை என்ருல் தொந்தரவு இல்லாமை, ஆகவே பிற உயிர்களுக்குத் துன்பத்தைச் செய்யாமல் இருப்பதுவே சிறந்த தர்மம். அஹிம்ஸையே சிறந்த தர்மமாக நினைக்கும் ஜெயினர்கள் தேன் சாப்பிடுவது கிடையாதாம்; ஏனெனில் தேனீயானது புஷ்பிக்கும் காலங்களில் சிறிதேனும் சோம்ப லில்லாமலும் சிரமம் பாராமலும் புஷ்பந்தோறுஞ் சென்று அலைந்தலைந்து தேனைத் துளித் துளியாகச் சேர்த்து புஷ்ப மில்லாத காலத்தில் தங்களுடைய ஆகாரத்திற்காக வைத் திருக்கிறது. அந்தத் தேனை மனுஷ்யன் சாப்பிடுவதா யிருந்தால் ஆயிரக்கணக்கான தேனீக்களைக் கொன்று தேனைக் கொள்ளை யடித்துத்தான் சாப்பிட வேண்டும். ஆகவே, தேன் சாப்பிடக்கூடாதென்பது ஜெயினர்க ளுடைய கொள்கையாம். ஜெயின் மதக் கிரந்தமாகிய "உதாஜ ஜைனம்" என்னும் கிரந்தத்தில் 'ஒரு துளி தேன் சாப்பிட்டவன் ஏழு கிராமங்களை எரித்துச் சாம்பலாக்கின வனுக்குச் சமமான பாபியாகிருன்" என்று கூறப்பட்டிருக் கிறது. ஆகவே அஹிம்ஸை என்ற தர்மத்தை ஒவ்வொரு வரும் கைக்கொள்ள வேண்டும். சொற்சுத்தம், மனச் சுத்தம் என்னும் இரண்டு தர்மங்களே மேலான தர்மம். "ஸத்யாந் நாஸ்தி பரோமோதர்ம" ஸத்யத்தைவிட

மேலான தர்மம் இல்லை என்று பெரியோர்கள் கூறு கிருர்கள். பிராம தர்மத்தில், ''ஸத்யத்தைவிட்டு வழுவலாகாது. தர்மத்தைவிட்டு வழுவலாகாது. நற்செய்கையை விட்டு நழுவலாகாது.''

ஸத்யாந் நப்ர மதிதவ்யம் தர்மாந் நப்ர மதிதவ்யம்
குசலாந் நப்ர மதி தவ்யம்

என்று கூறுகிறது. செந்நாப்போதரும் வாய்மை என்ற அதிகாரத்தில் கூறுகிருர்:

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

ஆதலினுல் சொற்சுத்தமிருப்பதுதான் சிறந்த தருமமாகும். நாம் தர்ம வழியில் நடந்தால்தான் துயர்கூர் பிறவியினின்று உய்வோம் பிரபுலிங்க லீலையில்,

எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்ருலது கொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின்
றுய்தற் கொருமை பெறவெண்ணு துழல்வோனுடம்பு பொற்கலத்தில்
பெய்தற்குரிய பால்கயிற் பெய்ததொக்கு மென்பால்

என்பதுபோல் மானிட சரீரம் எடுத்ததின் பயன் அறமார்க்கத்திலேயே ஒழுகல் வேண்டும். ஏனெனில் மனுஷ்ய சரீரம் ஒருநாளைக்கு அழிந்து போய்விடும். ஆகவே மானிட சரீரம் இருக்கும்பொழுது தர்மத்தின்பால் நின்று ஆன்மலாபத்தை யடைந்தே தீரவேண்டும்.

தவத்துறை மாக்கள் மிகப் பெருஞ்செல்வர்
ஈற்றிளம் பெண்டி ராற்ருப் பாலகர்
முதியோ ரென்ன இளையோ ரென்ஞன்.
கொடுந்தொழி லாளன் கொன்றவன் குவிப்பளிப்
ளழல்வாய் சுடலை தின்னக் கண்டுங்
கழில்பெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவா ருண்டோ
இளமையு நில்லா யாக்கையு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது

—மணிமேகலை

இராமோபதேசம்

பரத கண்டத்தில் பண்டைக் காலந்தொட்டு எல்லாவகைச் சிறப்பும் பொருந்தி விளங்குவது அயோத்தி மாநகரம். அந்நகரத்தை மதுரமுடைய செந்தமிழ்ப் புலவரும், வடமொழிப் புலவரும் வாயாரப் புகழ்ந்துள்ளனர். எல்லாவுலகத்தாரும் தவஞ்செய்து செல்லத்தக்கதாகிய மோக்ஷ உலகத்திலே யுள்ளவர்களுங்கூட அயோத்தியில் வந்து வசிப்பதற்கு விரும்புவார்களென்றால் அதன் பெருமையை அளக்க வல்லார் யாவர்?

செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீரியகூரியதீஞ்சொல்
வவ்விய கவிஞரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்து
வரம்பில்
எவ்வுலகத்தோர் யாவருந் தவஞ்செய் தேறுவா ரூதரிக்கின்ற
அவ்வுலகத்தோ ரிழவதற்கருத்தி புரிகின்ற அயோத்தி
மாநகரம்.

—இராமாயணம்.

இத்தகைய அயோத்தி மாநகரத்தை இரவிகுல திலகராகிய இராமர், இராவண சங்காரத்திற்குப்பின், பன்னீ

ராயிர மாண்டு அறநெறி இதுவே, என்று உலகினருக்கு நடத்திக்காட்டி அரசாண்டனர். அவ்வாறு ஆட்சிபுரிந்த காலத்து, ஓர் நாள் நகர வாசிகளும், கிராமவாசிகளும் இராமரிடம் ஞானோபதேசம் பெற வேண்டுமென்று விழைந்து, இராமபிரானுடைய சபா மண்டபத்தை யடைந்து, காவலன்பால் விடைபெற்றுச் சென்று கொலுவீற் றிருக்குந் தாசரதியைத் தொழுதார்கள். அவ்வாறு பக்தியுடன் வணங்கிய மகாஜனங்களை இராகவர் நோக்கி மனமகிழ்ந்து இன்னுரை கூறி எல் லோருமாகத் திரண்டு வந்த காரணம் யாதென வின வினர். மகாஜனங்கள் ''தர்மத்திற் சிறந்த தயாளுவே! விடயசுகங்களில் பற்றுடைய எங்கள் மனமானது, நிரதி சயானந்த நிமலவாழ்வில் அழுந்துமாறு மெய்ஞ்ஞானோப தேசம் புரிய வேண்டும்'' என்று விண்ணப்பித்தனர்.

ஜனங்களது நல்லுரையைக் கேட்ட தசரத நந்தனர் புன்னகை புரிந்து, ''சாதுமகாஜனங்களே! எப்போதும் நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள். ஒவ்வொரு இரவிலும், ஒவ்வொரு யாமத்திலும், என் தூதுவர்களைக் கொண்டு உபதேசிக்கிறேன். நீங்கள் யாவரும் இன்றிரவில் எனது தூதுவர் கூறும் வார்த்தைகளை ஞாபகத்துடன் கேட்டு நன்குகச் சிந்தித்து, பின்னர் உங்கள் மனதில் தோன்று வதை, நாளைக் காலை வந்து நம்பால் தெரிவியுங்கள்'' என்றார். அவ்வண்ணமே செய்கிறோமென்று அவர்கள் இரகுநாயகரைத் தொழுது தத்தம் இருக்கைக்குச் சென்றார்கள்.

இரவு வந்தவுடனே தூதர்களின் வார்த்தைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் இராம

தூதர்கள், இரவு பதினைன்றேகால் நாழிகைக்குத் தீவட்டிகள், ஆயுதங்கள், தடிகள் இவற்றை ஏந்திக் கொண்டு வாகனங்கள்மீதூர்ந்து யானைகள் மேல் துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்க, வீதிகள்தோறுஞ் சென்று,

''நகரவாசிகளே! கிராமவாசிகளே! நீங்கள் எல்லோரும் மோகத்தால் ஏன் வீணாகத் தூங்குகிறீர்கள்? இந்த நித்திரை சரியல்ல. எப்பொழுது அனர்த்தம் விளையுமோ தெரியவில்லை. நீங்கள் அனைவரும் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த அயோத்தியா பட்டினத்திற்கு ஒன்பது வாயில்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று இலகுவாயிருக்கிறது. இந்த இராமராஜ்யத்தில் பயமில்லை. ஆதலால் அந்த வாயில்களுக்குக் காவலாளிகளில்லை. தவிர, கதவுகளுக்குத் தாழ்ப்பாளுமில்லை. கருத்த நிறமுள்ள ஒரு பெரிய திருடன் தென் திசையிலிருக்கிறான் என்று கேள்வி. அவனை ஒருவரும் பார்த்ததில்லை. அவனுடைய தூதர்கள் மாறுவேடம் பூண்டு இந்நகரத்தின்கண் வந்து உலாவுகிறார்கள். அவர்களை நாங்களும் பார்த்தில்லை. வேறு தூதனைக் கண்டால் அந்த நிமிஷத்தில் எங்கும் பேதத்தைச் செய்து கலகஞ் செய்கிறதாகக் கேள்விப்படுகிறோம், இவ்விதம் அநேக தூதர்கள் இவ்விடஞ் சஞ்சரிக்கிறார்கள்.

இந்த அயோத்தியா பதியாகிய இரகுவீரர் நெடுங் காலம் வாழ்ந்திருக்கட்டும். அப்பொழுது நமக்கு யாதும் பயமில்லை. அந்த இரகுபதியினுடைய ஆற்றலை அறிந்தவன் யாவன்? ஞானகரரும், ஆத்மாராமரும், பிரபு

வாகிய இரகுநாதரை இத்தூதர்களால் என் செய்ய முடியும்? பலமற்றவர்களாகிய உங்களுக்கு அத்தூதர்களிடத்தில் எப்போதும் பயமுண்டு. உங்கள் மத்தியில் எக்காலத்தும் ஒரு பெருங்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. அதற்குள் அகப்பட்டு நீங்கள் சுழன்றுகொண்டிருக்கிறீர்கள். பலம் குறைந்த நீங்கள் இரவில் ஏன் தூங்கிவிடுகிறீர்கள்? அந்தத் தூதர்கள் உங்களைத் துன்மார்க்கர்களாக்கித் தங்கள் தலைவனுகிய திருடனை இங்கு வரவழைக்கிறார்கள். அந்தச் சமயத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆதலால் தூங்குவது நலமன்று; நித்திரையை விட்டு எழுந்திருங்கள், எழுந்திருங்கள். இந்நகரத்தில் இரவிலும் பகலிலும் விழிப்புடனிருந்து, அருகே எப்போதும் கூர்மையான கத்தியை வைத்திருக்க வேண்டும். சரீரத்தில் அழியாத கவசங்களை யணிய வேண்டும். தைரியத்துடன் பயமில்லாமலிருக்கவேண்டும். ஜனங்களே, இந்த அயோத்தியாபுரியில் எவன் எப்போதும் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிறானோ அவனுக்குத் திருடனிடம் எப்போதும் பயமில்லை. எங்களுடைய வாய்மொழிகளை, எக்காலத்தும் மறவாதிருங்கள். ஜனங்களே! சாவதானம்! சாவதானம்!! சாவதானம்!!!'' என்று இவ்விதம் அந்த இராம தூதர்கள் உரக்கக் கூறி, துந்துபி முதலிய மனோரம்மியமான வாத்தியங்களை முழக்கினார்கள். அவர்கள் இரவில் மூன்று முறை இப்பொன் மொழிகளைக் கூறிக்கொண்டு நகரமெங்கும் சஞ்சரித்தார்கள்.

இவ்விதமான நற்போதனையைக் கேட்ட மாந்தர்கள் யாவரும் அந்த விஷயங்களின் பொருள்களைக் கூர்த்த

மதியால் ஆராய்ந்து ஞானத்தை யடைந்தார்கள். பிறகு காலையில் எல்லோரும் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அளவு கடந்த மகிழ்ச்சியுடன் சபா மண்டபமெய்தி இராமபிரானை வணங்கி, "ஏ சீதாபதி! தங்களுடைய தூதர்களின் சொற்களை எப்போதும் நாங்கள் கேட்கிறோம். ஆனால் அதன் பொருள்களை விசாரியாமலிருந்தோம். இன்றிரவு தங்கள் தூதர்களுரைத்தவைகளைத் தங்களாணைப்படி, எங்கள் அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிந்தோம். அஞ்ஞானம் அகன்றது. ஞானம் உதித்தது. ஆனந்தம் பெருகியது. இராமச் சந்திரா, இப்போது தாங்கள் உபதேசிக்கவேண்டுமென்பதில்லை" என்று புகன்றனர்.

இவ்வாறு அவர்கள் கூறியதைக் கேட்ட இராமபிரான் புன்முறுவலுடன் ஜனங்களை நோக்கி, "எவ்வாறு உங்களுக்கு ஞானமுண்டாயிற்று? நீங்கள் கவனத்துடன் கேட்ட விஷயங்கள் யாவை? எவ்விதம் ஆலோசனை செய்தீர்கள்? அந்த விவரத்தை முறையாகச் சொல்லுங்கள்" என்று வினவினர்.

ஜனங்கள் "கோதண்டபாணி! நாங்களடைந்த ஞானத்தைக் கூறுகிறோம். செவிமடுத்தருள்வீர். மோகம் என்பதே இரவு. தூக்கம் என்பதே மயக்கம். இந்த மயக்கம் சரியல்ல. அனர்த்தம் என்பது மரணம். இந்த அயோத்தியா பட்டினமே சரீரம். இதன் ஒன்பது வாயில்களே சரீரத்தின் நவத்துவாரங்கள், அத்துவாரங்களுக்கு இமைகளும் உதடுகளுமே கதவுகள். பிராணன்களென்கிற இராஜ தூதர்கள் சஞ்சரிக்கிறார்கள். பரமாத்மாவே அரசன். ஜீவனும் இந்திரிய தேவதைகளும் தேகமாகிய

பட்டினத்தில் வசிக்கும் ஜனங்கள். காலம் என்பது பெரிய திருடன். ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்கிற தாபத்திரயங்கள் முதலிய தோஷங்கள்தான் காலனுக்குச் சேவகர்கள். இவைகள் வியாதி என்கிற மாறு வேடத்தோடு தேகமாகிய பட்டினத்தில் உலாவுகின்றன. இவ்விடத்தில் சத்சங்கமென்கிற பலமற்ற ஜீவன்களுக்கு அந்நோய்களால் பயமேற்படுகின்றது. பெருங்காற்றென்பது பேராசை. மோகத்தில் விழுந்து மயக்கத்தையடைந்து பேராசையால் சுழல ஆரம்பித்தால், அந்தக் காலனுடைய தூதர்கள் தங்கள் தலைவனாகிய காலனை வரவழைக்கிறார்கள். மரணமடையுங் காலம் எப்போதென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் மயக்கத்தை யடைவது சரியல்ல.

ஞானமாகிற கத்தி வைராக்கியமாகிற முனையோடு கூடியது. சத்தியமென்பதே கவசம். உறுதியான பக்தியோடிருத்தலே தைரியம். பரமாத்மாவை யறிந்தவனே விழித்துக்கொண்டிருக்கிறவனுவான். இவைகளுள்ளவர்களுக்கு எப்போதும் பயமில்லை. ஞானத்தையடைவது தான் சாவதானம். வாத்தியவொலிகள் அறிவை விளைவிக்கும் சாதுக்களுடைய வசனங்கள். அந்த வசனங்களை எப்போதும் அறிவைக்கொண்டு ஆராய்ந்து தெளிதல் வேண்டும். தங்கள் சந்நிதியில் வசிப்பதுதான் மோகமொழிந்த விடியற்காலம். நீர்தான் பரமாத்மா. இந்தச் சபைதான் வாசஞ்செய்யவேண்டிய இடம். உமது முன்னுலே நிற்கும் நாங்கள் எல்லோரும் மோக்ஷ பதவிக்கு வந்தவர்கள். இப்போது நாங்கள் தங்களைக் கேட்க

வேண்டியது யாது? தாங்கள் உபதேசம் செய்ய வேண்டியதுதான் யாது? தங்கள் திருநாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் மனிதர்கள் மோக்ஷத்தை யடைகிறார்கள். இதில் ஐயமில்லை'' என்று கூறினார்கள்.

இவ்விதமுரைத்த ஜனங்களின் வார்த்தைகளைக் கேட்டு, பிரபுவாகிய ஸ்ரீராமர் மிகவும் மகிழ்ந்து, ''ஏ மகா ஜனங்களே! புத்தியைச் செலுத்தி நன்றாகத் தெரிந்து கொண்டீர்கள். நீங்கள் எப்போதும் இன்பக் கடலில் மூழ்கியிருப்பீர்களாக'' என்று அருளுரை மொழிந்தனர்.

மோனமென்பது ஞானவரம்பு

"மோனமென்பது ஞான வரம்பு" என்ற வாக்கியம் ஔவைப் பிராட்டியாரின் அமுத மொழி. அதாவது "மௌனம் என்பது ஞானத்தின் எல்லை அல்லது ஞானத்தை அடையும் வழி" என்று பொருள். மௌனம் அல்லது மோனம் என்ருல் சும்மா இருப்பது என்றும் பொருள்படும். சத்துவம், இரஜசு, தாமசு என்று முக்குணங்களில் இது சத்துவ குணத்தைச் சேர்ந்தது. சாதாரணமாக ஒருவன் வாய் பேசாமலிருந் தால் அவன் மௌனமாக இருக்கின்ருன் என்று கூறுவது உலக வழக்கம். ஆனுல் பேசாமல் மட்டும் இருந்தால் ஞானம் கிட்டிவிடுமா? அப்படியாயின் ஊமைகளெல்லாம் ஞானிகளாக வேண்டுமன்ரே? சன்னியாசிகள், துறவிகள் இவர்களில் சிலர் வாய் பேசாமல், அவசியமாக வெளியிட வேண்டிய எண்ணங் களை எழுதிக் காட்டுவதுண்டு. இத்தகையோர் ஒரு

காரிய சித்திக்காக குறித்த காலம் வரையில் மௌன விரதத்தை யனுஷ்டிப்பார்கள். அதனுல் பிறர் அவர்களிடம் அதிகமாகப் பேசுவதற்கு இடமில்லாமற் போகிறபடியால் அவர்களது மனம் நாட்டப்பட்ட நிலைமையினின்று சலிக்காமலிருக்க அனுகூலமாகிறது. ஆயினும் இவைகள் பூரண மௌனமாகா. கீழ்க்கண்ட மூன்றுவித மௌனங்கள் அடங்கியதே பூரண மௌனம். அதுவே ஞானிகளடையும் மௌனம் : 1. வாக்கு மௌனம்; வாய்திறந்து எதையும் பேசாதிருத்தல்; 2. காஷ்ட மௌனம்; அவயவங்களால் ஒரு வேலையும் செய்யாதிருத்தல்; 3. மனோ மௌனம்; மனத்தால் எதையும் சிந்திக்காதிருத்தல்.

ஒரு காரியம் நடக்க வேண்டுமாயின், மனம், இந்திரியம், புலன் மூன்றும் சேர்ந்தே அது நடக்க வேண்டும்; பிறகு அது இந்திரியத்தின் உதவி கொண்டு புலன் வழியாய் வெளி விஷயங்களை யுணர்ந்து கருமேந்திரியங்களால் செய்கிறது. மனம் நினைக்காவிட்டால் ஒரு காரியமும் நடவாது. ஆகையால் மனோமௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் நாம் கருத்தைச் செய்கிறோம். மனத்தால் நினைப்பதாலும், வாக்கால் வசனிப்பதாலும், காயத்தால் ஒன்றைச் செய்வதாலும் நாம் பாவ புண்ணியங்களைச் செய்கிறோம். மனமடங்கி விட்டால் சன்மமே யொழிந்துவிடும். மனம் சலனமற்ற போது சத்துவகுண மாத்திரமாகச் சேடிக்கிறது. மனத்தின் உருவநிலையே அதன் இரஜோ தமோ குணங்களாம். அருவ நிலையே அவன் சத்துவ குணமாகும். மனோலய

மடைந்த ஞானிகள் ஈசுரார்ப்பணமாகக் கனவு போல் காரியங்களைச் செய்தாலும் அவர்களுக்குக் கர்மம் உண்டாகாது. மனமொடுங்கினால் ஆன்மா அந்தச் சுத்த சத்துவ விருத்தியால் தன்னைத்தானடைகிறது; அதாவது ஞானத்தை யடைகிறது. அதனாலே "மோன மென்பது ஞான வரம்பு" எனக கூறப்பட்டது. மனம் உள்ளும் வெளியுமாகிய இரண்டு வழிகளில் தொழில் செய்கிறது. வெளியில் இந்திரிய வாயிலாகப் புறம் போந்து விஷயங்களில் பிரவேசிக்கிறது! உள்ளே மனோராச்சியம் செய்கிறது. ஒவ்வொரு சமயம் நாம் வெளிவிஷயங்களைக் கவனிப்பதை விட்டு மனோராச்சியமும் செய்யாமல் (அதாவது மனத்தில் ஒன்றும் சிந்தியாமல்) சும்மாவிருக்கிறோம். அப்போது அருகிலுள்ளோர் பேசுவதும் நமக்குக் கேட்காது. எதிரில் ஒருவர் சொல்லுவதும் தெரியாது. ஏனெனில் மனம் எந்த இந்திரியத்தோடும் சம்பந்தப்படாமலும் எதையும் சிந்திக்காமலுமிருக்கிறது! ஆகவே மௌனமாகிய நிலைமை.

ஒரு தடாகத்தில் நீர் கலங்கி அலைகள் வீசிக்கொண்டிருக்கையில் அத்தடாகத்தின் அடியில் என்ன இருக்கிறதென்று தெரியாது. அத்தகைய தடாகத்தைப் போன்றது சலனத்தோடு கூடிய மனம். அலைகளின்றி அசைவற்று தெளிவான நீரையுடைய தடாகத்தில் அடியிலிருக்கும் வஸ்துக்கள் புலப்படும். சலனமற்ற ஒரே நிலையில் நிற்கும் மனம் அதாவது சத்துவ குணமாத்திரமாகச் சேடித்து நின்ற மனம் அலையற்ற தடாகம் போன்றது. அப்போது அதன் அடியிலுள்ளது தோன்றும். மனதின் அடிப்பாகமே அது உதிக்குமிடம். ஆகையால் அங்கு நோக்க, ஆன்ம

தரிசனம் உதயமாகும். ஏனெனில், ஆன்மாவினின்றே மனம் உதிக்கின்றது.

தாயுமானவர் மனத்தை நோக்கி ''நின் சன்ம தேசத்தில் நீ செல்லல் வேண்டும்'' என்றார். அதாவது ''மனமே, நீ எங்கிருந்து வந்தாயோ அங்கு போய்ச் சேர்'' என்றார்; இன்னும் அம்மகானே,

"சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா மோகினி ஏனடா தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண்டாங் கன்ம என்றும்
நிட்டா சிறு பிள்ளாய் நீ"

"சும்மா விருக்கச் சுகஞ்சுகமென்று கருதி யெல்லவா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென்
பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேன் அந்தோவென்
விதிவசமே"

என்றும்,

"சும்மா விருப்பதுவே கட்டற்றபூ ரணமென்று
எம்மாலறிதற் கெளிதோ பரா பரமே"

என்றும் அருளியதும், குமரக் கடவுளின் திருவருள் பெற்றுத் திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் கந்தரனுபூதியில்,

"சும்மாவிரு சொல்லற வென்றலுமே
யம்மா பொரு ளொன்று மறிந்திலனே"

என்று அருளியுள்ளதும் ஈண்டு சிந்திக்கற்பாலன.

இந்த மோன நிலையை யடைவதற்கு ஆசை யொழிய வேண்டும். எல்லோரும் ஏக காலத்தில் இதை யடைய முடியாது. மனம் ஒரே சிந்தனையில் நிற்பதே கஷ்டம்; சதா ஒரு சிந்தனை விட்டொரு சிந்தனையிற் குதித்து அலைந்துகொண்டே யிருப்பதுதான் அதன் சுபாவம்; வேதம் மனத்தைக் குரங்கிற்கே ஒப்பிட்டிருக்கிறது. எத்தகைய குரங்கெனில், குரங்கு கள்ளைக் குடித்துவிட்டால் அதிக சேட்டை செய்யுமன்றோ? அதோடு அது காரமான இஞ்சியை மென்றுவிட்டால் இன்னும் அதிக சேட்டை; அதோடு அதைத் தேளுங் கொட்டி விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை; அதுவும் போதாதென்று ஒரு பேயும் பிடித்துக்கொண்டால் அக்குரங்கு எப்படியிருக்கும்? அத்தகைய குரங்கிற்குச் சமதையாக மனத்தை ஒப்பிட்டிருக்கிறது.

ஆகையால் முதலாவது ஆசையைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்கவேண்டும். மனம் இச்சா சொரூபம்; இச்சையை யொழித்தால் மனமடங்கும். அதோடு மனதை முதலில் குறித்த ஒரு சிந்தனையிலேயே நிறுத்தப் பழக வேண்டும். அதற்கே சுகுணோபாசனை வைக்கப்பட்டிருக்கிறது. உலக போகத்திலிருக்கும் இச்சையை உபாசனா மூர்த்தியிடம் செலுத்தி (அதுவே பக்தியெனப்படுவது) மனத்தை அங்கு நிறுத்தப் பழகவேண்டும். அதில் திடப்பட்டு அநுபவம் முதிரமுதிர மனவொடுக்கம் சித்திக்கும். இது மிகக் கஷ்டமானதேயாயினும் சாத்தியமானதே. சும்மா விருப்பதுவே மிகக் கஷ்டம். இது சோம்பலல்ல. இதில்தான் மனம் தன் பூரண சுறுசுறுப்போடு வேலை செய்கிறது. மனத்தை அதன் இச்சைப்படி விட்டுவிட்டு

அதன் பின் அலைவது கஷ்டமல்ல. ஒரு குதிரையை அதன் மனம் போனபடி முரட்டுத்தனமாய் மேடு பள்ளம் பாராது பாய்ந்தோடும்படி விட்டுவிடுவது கெட்டிக்காரத்தனமல்ல; கஷ்டமுமல்ல. அதன் கடிவாள வாரை யிழுத்துப் பிடித்து அதை யடக்கி நிறுத்துவதே கஷ்டம். அப்படிச் செய்பவனே சாமர்த்தியவான். மனத்தை யடக்கி யாளக் கற்றவனே உண்மை வீரன். அவனே புருடனெனப் படுவான். நமது முன்னோர் அச்சக்தியாலேயே திரிகால ஞானிகளாய் அபூர்வ காரியங்களைச் செய்தார்கள். இத்தெய்வீக சாஸ்திரம் நம் புண்ணிய பூமியிலேயே அநாதியாயுள்ளது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இதற்கு முயற்சிசெய்ய வேண்டும். ஏனெனில் மனிதன் அடையத்தக்க பேரின்பப் பேற்றை யளிக்கவல்லது இம்மார்க்கமொன்றே.

பொறுமையின் பெருமை

"சினத்தை நிந்தனை செய்யும் முனிவரர்"

—(உனைத்தினம், திருப்புகழ்)

மனிதர்களுக்குப் பொறுமையே சிறந்த ஆபரணம். சினத்தை அறவே நீக்கிப் பிறர் எத்துணை இடர் செய்யினும் அதனையுன்னுது பொறுத்திருத்தல் வேண்டும். பிறர் தம்மை யிகழ்ந்தாலும் செய்யத்தகாத கொடியவற்றைச் செய்தாலும் மனம் நொந்து அவர்க்கு அறனல்லாதவைகளைப் புரியாது பொறுத்திருத்தல் சீரியோர் செயல்.

திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று

—திருக்குறள்.

இத்தகைய பொறுமையை மிக மிக உறுதியாய்க் கடைப்பிடித்தவர் பலர். உதாரணமாக ஒருவரை விளக்குவாம்.

தவத்தையே தானமாக அடைபவரும், பிருகு புதல்வரும் உயர்ந்த ஞானமுள்ளவருமாகிய சியவனர் ஒரு

காலத்தில் சூரியகுலத்தரசனுகிய குசிகராஜனிடத்தில் சென்று "குற்றமற்ற கொற்றவனே! எனக்கு உன்னிடம் வசிக்க விருப்பமுண்டாயிருக்கிறது" என்றனர். குசிக ராஜன், அந்த முனிவருக்கு எல்லாவித உபசாரமும் தன் பத்தினியுடன் சேர்ந்து செய்தான்; பாதம் விளக்கினுன். நன்கு ஆராதனை புரிந்தான்; ஆகாரமீந்தான். "தவ முனிவரே! அடியேனும் அடியேனுடைய பத்தினியும் உமக்கு உட்பட்டவர்கள்; நாங்கள் என் செய்யக் கடவோம்? அரசு, தனம், பசுக்கள், யாகங்கள், தானங்கள் இன்னும் என்ன வேண்டுமானுலும் சொல்லும்; உமக்கு எல்லாவற்றையும் தருகிறேன். இந்த அரண்மனையும் இந்த ராஜ்யமும் இந்த அரியணையும் உம்முடையவை; நீர்தான் அரசர்; உலகத்தை அரசாளுவீர்; நான் என் மனைவியுடன் உமக்குட்பட்ட ஊழியன்" என்று கூறினுன். இந்த இனிய வசனங்களைக் கேட்ட சியவனர், மனமகிழ்ந்து குசிகனை நோக்கி, "மன்னனே! அரசையும், தனத்தையும், பசுக்களையும், பெண்களையும் யாகத்தையும் நான் விரும்பவில்லை. நான் ஒரு தவஞ்செய்ய ஆரம்பிக்கப் போகிறேன். உங்களிருவருக்கும் இஷ்டமிருந்தால் நீங்களிருவரும் மன வேறுபாடின்றி கவனத்துடன் எனக்குப் பணிவிடை செய்யுங்கள்" என்றனர். அதனைக் கேட்ட அரசனும், அரசியும், உள்ளம் உவந்து, "அப்படியே ஆகட்டும்" என்று கூறினர். உடனே குசிகன் மனமகிழ்ச்சியுடன் அந்த மாதவரைத் தன் வீட்டில் சிறந்த இடத்திற்கு அழைத்துச் சென்ருன்; அழகான இடத்தைக் காட்டி "தபோதனரே! தங்களுக்கு இது சயனம். இதில் இஷ்டப்படி இருக்கலாம். உமக்கு உவகை உண்டாகும்

படி நாங்களிருவரும் முயல்வோம்'' என்றனன். அத்தரு வாயில் கதிரவன் மேற்குக் கடலில் மூழ்கினன்.

மன்னவன் தன்னியல்புக்குத் தக்க ஆகாரத்தை அவருக்குக் கொடுத்தான்; தருமந்தெரிந்த அந்தச் சியவனர் உணவு கொண்டபின், அரசனையும் அரசி யையும் பார்த்து, ''எனக்கு நித்திரை வருகிறது; நான் படுக்க விரும்புகிறேன்'' என்று கூறிப் படுக்கை யறையிற் சென்று படுத்தார். இறைவன் மனைவியுடன் நின்றுகொண் டிருந்தான். ''நான் தூங்கும்பொழுது எழுப்பக்கூடாது; நீங்களிருவரும் கண் விழித்துக்கொண்டு என் கால்களைப் பிடிக்கவேண்டும்,'' என்றனர். அறத்தின் வழிநின்ற அரசன் ''அங்ஙனமே செய்வோம்'' என்றனன். பின்னர், மன்னன் தன் மனைவியுடன் அவருக்குப் பணிவிடை புரிந்தவண்ணமா யிருந்தான். இரவு கழிந்ததும் அவரை எழுப்பினனில்லை, மனம் சலித்தானில்லை. அந்தச் சியவனர் ஒரு பக்கமாக இருபத்தொரு நாள் தூங்கினர். ஊக்கமுள்ள உத்தமனாகிய அரசன் பத்தினியுடன் ஆகார மின்றியும், நித்திரையின்றியும் களிப்புடன் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான்.

முனிவர் தாமாகவே எழுந்தார். ஒன்றுஞ் சொல்லா மலே வீட்டினின்றும் வெளியிற் சென்றார். அரசனும் அரசியும் பசியினாற் களைப்புற்றவர்களாயிருந்தும் மனம் சலிக்காது அம்முனிவரைப் பின் தொடர்ந்தனர். எங்கு போகிறீர் என்று கேட்டாரில்லை, அம்முனிவர் அவர்களைப் பார்க்கவேயில்லை; அவர்கள் பார்த்திருக்கும்போதே மறைந்தனர். அரசன் தரையில் மூர்ச்சித்து விழுந்தான்.

தெளிந்து எழுந்தான். தேவியுடன் தேட ஆரம்பித்தனன். முனிவரைக் காணுதவனுகி மனேவியுடன் மதிமயங்கித் திரும்பி நகரத்திற்குள் பிரவேசித்தான். அந்த மாதவருடைய செய்கையையே நினேத்து ஒன்றும் பேசாமலிருந்தான். அரண்மனேக்குள் நுழைந்தான். அந்த மாதவர் அதே படுக்கையில் படுத்திருக்கக் கண்டு அந்தப் புறுமையையுன்னி இறும்பூதுற்று அரசனும், அரசியும் திகைத்து நின்றனர். அவரைக் கண்டவுடனே களேப்பு நீங்கினர். அவருடைய கால்களேப் பிடித்துக்கொண்டு பணிவிடை புரிந்து நின்றனர். மாதவர் மற்ருெரு பக்கமாக மறுபடியும் இருபத்தொரு நாள் தூங்கினர். மனஞ் சலியாது பத்தினியுடன் பார்த்திபன் ஏவல் செய்த வண்ணமாயிருந்தான்.

முனிவர் கண்விழித்து எழுந்தார். அரசன், அரசி இருவரையும் பார்த்து, ''நான் ஸ்நானம் செய்யப் போகிறேன். எனக்கு எண்ணெயிட வேண்டும்'' என்றனர். உடனே அரசன் சதபாகம் என்னும் தைலத்தைக் கொண்டுவந்து முனிவரைச் சுகமாக இருத்தி பசியினுலும், களேப்பினுலும் ஓய்ந்திருந்தும் அதனேப் பொருட்படுத்தாது தைலந் தேய்த்தனன். அம்முனிவர் பே.ாதுமென்று சொல்லவே இல்லே. அவர்கள் உறுதியைக் கண்ட அருந்தவர் எழுந்து நீராடும் அறையுள் நுழைந்து அரசன் பார்த்திருக்கும்போதே மறைந்தனர்.

வேந்தன் வெறுப்புற்ருனில்லே. பின்னர், அந்த முனிவர் ஸ்நானஞ் செய்தவராக அரியணேமேற் காணப் பட்டார். மன்னன் மனமகிழ்ந்து வணங்கி உணவு சித்தமாயுளது என்று கூறி அவர் அனுமதித்தவுடன், பற்பல

கறிகாய்களையும் உயர்ந்த அன்னத்தையும், பல வகையான கனிகளையும் கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் சன்யாசி இவர்கள் உண்ணுகின்ற ஆகாரங்களையும் தருவித்து முனிவர்முன் வைத்தான். சியவனர் அவைகளனைத்தையும் படுக்கையையும் ஆசனத்தையும் எரித்துவிட்டனர். மன்னன் அதற்கும் சினங்கொண்டானில்லை. உடனே முனிவர் மறைந்தனர். மன்னன் அன்றிரவெல்லாம் முகமலர்ச்சியுடன் பொறுமையை மேற்கொண்டு மௌனமாக இருந்தான்.

அந்த மன்னனிடம் ஒரு குற்றத்தையுங் கண்டு பிடிக்க முடியாமற் போன சியவனர் இறைவன் முன் தோன்றி, ''என்னைத் தேரிலேற்றி நீயும் உன் மனைவியும் விரைவாக இழுத்துக்கொண்டு செல்லுங்கள்'' என்றனர். வேந்தன் விரதமுனிவரை வணங்கி, ''வேடிக்கைத் தேரிழுக்கலாமா? சண்டைத் தேரிழுக்கலாமா?'' என்றனன். முனிவர், மகிழ்ந்து ''ஆயுதங்கள் நிறைந்த யுத்தத்திற்குரிய தேரை உடனே கொண்டுவா'' என்றனர். அரசன் 'அப்படியே' என்று கூறிச் சிறந்த தேரை அலங்கரித்து நுகத்தடியின் இடது புறத்தில் மனைவியை நியமித்து வலதுபுறத்தில் தானிருந்து கொண்டு, முனையில் வஜ்ர ஊசியை யுடைய சாட்டையை அத்தேரில் வைத்து, ''பகவானே, இரதம் எங்கு போக வேண்டும்? நீர் செல்லுமிடத்திற்குத் தேர் போகும்'' என்று சொன்னான், சியவனர், ''வேந்தனே, அடியடியாக மெல்லச் செல்லவேண்டும். எனக்குச் சிரமமுண்டாகாதபடி என் இஷ்டம் போல் போகவேண்டும். ஜனங்களெல்லாம்

பார்க்கும்படி இரதத்தை நீங்கள் இழுக்கவேண்டும். வழியிலுள்ளவரை விலக்கப்படாது. அவர்களுக்குத் தனங்கள் இரத்தினங்கள் எல்லாவற்றையும் மிச்சமின்றி நான் தரவேண்டும். இவற்றை ஆலோசியாமல் செய்'' என்று புகன்றனர்.

மன்னன் பணியாளர்களை நோக்கி முனிவர் எதை எப்படிச் சொன்னாலும் அதையெல்லாம் தடையின்றித் தரவேண்டுமென்று கட்டளையிட்டுப் பத்தினியுடன் தேரை இழுக்க ஆரம்பித்தான். அந்த நகரமனைத்தும் ஆ! ஆ! என்று கூக்குரலிட்டது. அரசன் அரசியிருவரும் அந்தச் சாட்டையின் கூரான முனையினால் முதுகிலும், கன்னத்திலும் குத்தப்பட்டும் மனவேறுபாடின்றி கோபங்கொள்ளாது இரதத்தை இழுத்தனர். ஆகாரமில்லாமல் உடல் நடுக்கமுற்ற அவ்விருவரும் மன உறுதியினால் அந்தப் பெரிய தேரைக் கஷ்டப்பட்டு ஐம்பது தினங்கள் இழுத்தனர். முனிவர் பொறுமையை விடாத மன்னனது செயற்கரிய செயலைகயை நோக்கி மகிழ்ந்து அரசனது திரவியத்தையெல்லாம் வாரிவாரி யளித்தார். இறைவன் அதற்கும் சினந்தானில்லை.

பிறகு அந்த அருந்தவ முனிவர் அளவிட முடியாத பொறுமையைக் கொண்ட அரசன் அரசி இருவரையுங் கண்டு, உள்ளம் உவந்து தேரை விட்டிறங்கி அவர்களை விடுவித்து சாட்டையினால் குத்தப்பட்ட மிருது சரீரமுள்ள அரசன் அரசியிருவரையும் அமிர்தத்திற்கொப்பான தம் கரங்களால் அன்புடன் தடவினார். அவர்களுக்கு நல்ல அழகிய சரீரத்தை யுண்டு பண்ணினார். உடனே

அவர்கள் யௌவனமுடையவர்களானுர்கள். வேண்டிய வரங்களையீந்தனர். பசி தாகம் இளைப்பு இவைகளை நீக்கினுர். எல்லாவித சௌபாக்கியங்களையுமளித்தனர். அன்புடன் ஆசி கூறினர்.

பொறுமையை விடாத மன்னன் விண்ணவராலும் மன்னவராலும் புகழப்பட்டு புத்தொளிர் பொழியும் பூ மாரியில் மூழ்கி முனிவருடைய பூரணமான ஆசியைப் பெற்று, நகரத்து ஜனங்களும், அமைச்சர்களும் எதிர் கொள்ளத் தேவமாது போலாயின தன் மனைவியுடன் திரும்பி நகரஞ்சென்று, காலைக்கடன்களை முடித்து உணவு கொண்டு சுகமேயிருந்தான்.

இத்துணை சிரமத்தையுற்றும் அந்த மன்னன் தன் மனைவியுடன் சினத்தையடையாது பொறுமையை மேற் கொண்டு பொன்றுப் புகழை எய்தினன்.

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

—திருக்குறள்

மகன் தாய் தந்தைக்கு ஆற்றும் உதவி

எண்ணிலாத நெடுங்காலமாகப் பல பிறவிகளை எடுத்தெடுத்திளைத்தோம். இப்பொழுது பெறுதற்கரிய பிறவியாகிய மனிதப் பிறவியைப் பெற்றுள்ளோம். இம்மனித யாக்கையால்தான் நாம் பெறுதற்கரிய பேற்றை அடைய முடியும். அயனெடுமாலும் தேடித்தேடிக் காணொணாத தேவ தேவனுடைய திருச்சீரடியில் இருமாந்தமர்ந்திருக்க இவ்வாழ்க்கை ஒரு வழிகாட்டியேயாகும். இவ்வரும் பிறவியை நாமடைவதற்கு அநுகரணமாக இருந்தவர் மாதா பிதாக்கள். ஆகவே தாய் தந்தையரிடத்தில் மக்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கத்தைப் பற்றிச் சிறிது வரைகுவோம் என்ற பேராவலுடையவனுயினேன்.

இப்பெரியதோர் விஷயத்தை மாத்ரு பித்ரு பக்தியில்லாத அடியேன் எழுதுவது இழுக்காமெனினும் சேற்றினுட் பிறந்த தாமரையையும், சிப்பியிற் பிறந்த முத்தையும்,

எவ்விதம் பெரியோர்கள் புறக்கணிக்காரோ, இதனையும் அவ்விதம் ஏற்றுக்கொள்வீர்களாக.

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' நமது வேதங்களும் பெரியோர்களும் மக்கட்குத் தாய் தந்தை தெய்வம் என்று கூறுகின்றன.

மாதா பிதாக்களைக் காட்டிலும் அன்னியமாக மற்றொரு தெய்வம் மக்களுக்கு இல்லையென்பதற்குக் குணம் நிறைந்த முனிவர்களும் சாக்ஷி கூறுவார்கள்.

அவர்களைக் காட்டிலும் சிறந்த வஸ்து ஒன்று உண்டானதும் இல்லை; உண்டாகப் போகிறதுமில்லை, ஆகவே மனிதனுக்குத் தாய் தந்தையரைவிடச் சிறந்த வஸ்து மூன்றுலகங்களிலும் இல்லை.

நம்மைப் பெறுவதற்காக அநேக தானதருமங்கள் புரிகின்றனர். சரீரம் இளைத்துப் போகும்படி விரதமிருக்கின்றனர். குழந்தையை வேண்டித் தமது மெல்லிய பாதங்கள் கல்லிலும் முள்ளிலும் அடிபட யாத்திரை புரிகின்றனர். இவ்விதம் தவமாதவமிருந்து கர்ப்பம் உண்டான பிறகு தாயானவள் மா பலா முதலிய கனிவர்க்கங்களைச் சாப்பிடுவது கிடையாது. உண்டியைச் சுருக்குகிருள்; கர்ப்பம் நாசமடையாமலிருக்க வேண்டுமேயென்று விசாரப்படுகிருள்; மூன்ருவது மாதத்தில் மசக்கு என்னும் நோயால் மிகுந்த துன்பத்தை அடைகிருள். மாதங்கள் ஏற ஏற அநேகவிதமான துன்பங்களை அனுபவிக்கிருள். ஒன்பதாவது மாதத்தில் திரும்பிப் படுப்பதாயிருந்தால் மெள்ள அமர்ந்து பிறகு படுக்கிருள்;

நடக்க முடியாமல் தவிக்கிருள். கர்ப்பத்திஞல் தாய் படும் பாடுகள் எண்ணிலடங்காவென்பது மிகையாகா தன்ருே? குழந்தை வெளிப்படுங் காலத்தில் அளவில் லாத வருத்தத்தை அடைகிருள்.

"வந்திப் பரிவாய் மகனேப் பெருந்துயரம்
நொந்தறிவாளோ நுவல்" (நீதிவெண்பா)

தாயுமானப் பெருந்தகையார்:

"பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளைப்
பெருப்போதை யறிவாளோ"

என்றனர். குழந்தை மலஜல விசர்ஜனம் செய்தால் கொஞ்சங்கூட அசங்கதமில்லாமல் எடுத்தெறிகிருள். குழந்தைக்கு ஏதேனும் வியாதி வந்தால் தான் மருந்து சாப்பிட்டுப் பத்தியமிருக்கிருள்; தூக்கத்தை வெறுத்து விடுகிருள்; குழந்தை இளைத்துப்போனுல் சந்திகளில் கழிப்புக் கழித்துப் போடுகிருள். குழந்தையை முன்னிட்டு, சிறு தெய்வங்களையும் வந்திக்கிருள். குழந்தைபால் அருந்தாவிட்டால் கண்ணீர் விட்டு அழுகிருள். குழந்தையின் சௌகரியத்திற்காகத் தாழ்ந்தவர்களைக் கொண்டும் மந்திரித்துக் கயிறு கட்டிக் கொள்கிருள். குழந்தை சாப்பிடாமுன் தான் சாப்பிடமாட்டாள்; மகன் பள்ளிக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவர சிறிது கால தாமதமானுலும் இன்னும் என் அருமைக் கண்மணி வரக் காணேமே? பசியினுல் வாடுவானே! என்று பரிதவித்து அடிக்கடி வாசலில் வந்து பார்க்கிருள். குழந்தை சாப்பிடாவிட்டால், "அப்பா வருவார், பழம் வாங்கி வரு

வார்'' என்று இனிய வார்த்தைகளைக் கூறி அன்னம் அருந்தச் செய்கிருள்; சில தாய்கள் குழந்தைக்கு சல தோஷம் உண்டானுல் அடிக்கடி மூக்குச் சிந்திஞல் நாசி வலிக்குமே யென்றெண்ணி வாயினுலும் உறிஞ்சு கின்றனர். ஆ! என்னே! மாதாவின் கருணை! அவர்கள் பரிவுதான என்னே!

குழந்தையினுல் தன்னுயிரையும் திரணமாக மதிக் கின்றனர்.

கவி சாதுர்யத்திலுள்ள பலவகையையும் நைஷத காவியத்தில் காணலாம். நைஷதம் இயற்றியவர் ஸ்ரீ ஹர்ஷகவி. இவருடைய தகப்பஞராகிய ஸ்ரீ ஹீரன் ஒரு அரச சபையில் வித்துவாஞக இருந்தார். ஒருநாள் வேறு தேசத்தில் இருந்து ஒரு வித்துவான் அரச சபைக்கு வந்தனர். அவர் தம்முடைய திறமையால் ஸ்ரீ ஹீரனை ஜயித்தார். தோல்வி அடைந்த ஏக்கத்திஞல் ஸ்ரீஹீரன் காலமாஞர். அஞ்ஞான்று ஸ்ரீஹர்ஷர் சிறு குழந்தை யாக இருந்தார். இவர் தயாராகிய மாமல்லதேவிக்கு ஸ்ரீஹீரன் சிந்தாமணி மந்திரத்தை உபதேசித்து இருந்தார். அம்மந்திரத்தை ஜபித்தவர்கட்கு சரஸ்வதி கடாக்ஷமுண் டாகும். மாமல்ல தேவியானவள் தன் குழந்தைக்கு அச்சிந்தாமணி மந்திரத்தைச் சொல்லி வைத்தாள்.

அக்குழந்தையானது எப்பொழுதும் அம்மந்திரத்தைக் கூறிக்கொண்டே யிருக்கும். வாமாசாரப் பிரயோகங் களில் சவத்தின்மேல் இருந்துகொண்டு ஒரு மந்திரத்தை ஜபித்தால் அதிக பலன் உண்டாகுமென்று மாமல்ல தேவிக்குத் தெரியும்.

ஒருநாள் படுத்துக்கொண்டு இருக்கும்பொழுது தன் மார்பின்கண் குழந்தையை வைத்துக்கொண்டாள். குழந்தையானது மந்திரத்தைக் கூறிக்கொண்டு இருந்தது. எப்படியாவது நம் குழந்தை அபிவிருத்தி அடைந்து சமானமில்லாத வித்தையடைந்தால் போதும்; நம்முடைய உயிர் போனலும் போகட்டும், என்று நினைத்து மாமல்ல தேவியானவள் தன் கழுத்தை வெட்டிக் கொண்டாள்.

தாயின் சவத்தின் மேலிருந்து குழந்தை மந்திரத்தைக் கூறவே உடனே சரஸ்வதி கடாக்ஷமுண்டாகி யாவர்களாலும் புகழப்பெற்ற பெரும் புலமை வாய்ந்தது. அவர்தான் பிறகு நைஷத காவியத்தை இயற்றினர். குழந்தைக்கு ஏதேனும் சில ஆபத்துக்கள் உண்டானல் மாதாக்கள் தன்னுயிரையும் மாய்த்துக் கொள்ளுகிறார்கள். விபவ வருஷம் ஐப்பசி மாதம் ஆறும் நாள் காங்கேய நல்லூரில் எமது தகப்பனரால் முருகப்பெருமானுடைய திருவாலயத்தில் திருக்கோபுரம் புதுப்பித்துக் கொண்டிருக்கும்பொழுது எமது தமயனர் ஸ்ரீசைலவாசர் அக்கோபுரத்தின்மீது ஏறினர். மழையால் வழுக்கி அறுபடி உயரத்திலிருந்து தவறிவிட்டார். எம் தாயாராகிய ஸ்ரீமதி கனகவல்லி அம்மையார் மகன் கோபுரத்தின் மேலிருந்து விழுந்தான் என்று கேட்டவுடனே மரணத்திற்குத் தகுந்த மூர்ச்சையடைந்து கீழே விழுந்தார்கள். பற்களெல்லாம் கிட்டிவிட்டன. அவ்வூரிலுள்ளோ ரனைவரும் இம்மாது பிழைக்க மாட்டாளென்று கூறினர்கள். குறைந்தபட்சம் அரைமணி நேரம் வரைக்கும் அம்மூர்ச்சை தெளியவே இல்லை. ஆனல் விழுந்தவருக்குக் காயங்கள் ஒன்றும்

ஏற்படவில்லை. தாயாருக்குக் குழந்தையின் மீதுள்ள அன்பை அஞ்ஞான்று யான் கண்டேன்.

1927-ம் வருஷத்தில் திருவனந்தபுரம் மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு புகை வண்டியில் ஒரு மாது, தன் குழந்தைக்கு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தாள். எவ்விதமோ குழந்தை தவறிவிட்டது! குழந்தையின் தாயானவள் பிள்ளையின் மேல் வைத்த அன்பால், "மகளே!" என்று குழந்தையைத் தாவிக் கீழே விழுந்தாள்.

குழந்தைக்குச் சொற்பகாயங்கள் ஏற்பட்டன; தாய் உயிர் துறந்தனள் என்று சுதேசமித்திரன் பத்திரிகையில் கண்ணுற்றோம். இவை போல் இன்னும் அநேக சரித்திரங்களைக் கண்டும் கேட்டுமுள்ளோம். ஆகவே குழந்தைகள் துன்பப்படத் தாய் தந்தைகள் மனஞ்சகிக்க மாட்டார்கள். தமக்கு யாது துக்கம் வந்தபோதிலும் மகனுக்குத் தெரியா வண்ணம் தாயே யனுபவிக்கிறார்கள். ஆகாரம் சிறிது கிடைத்தால் அதனை மகனுக்குத் தந்து தாய் தந்தைகள் பட்டினியாக இருக்கின்றார்கள்.

தாய் தந்தைகள் செய்யும் நன்றியை யாரே கூற வல்லார்? குழந்தையினால் மாதா பிதாக்கள் படுந் துன்பம் அளவிடமுடியாது. இதனாலல்லவோ முற்றுந் துறந்த முழு ஞானியாகிய பட்டினத்தடிகள்,

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபக லாய்சிவனை யாதரித்து
சரியச் சுமந்து பெற்றதாய்"

என்றும்

" வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும்-தோண்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறுகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய் "

என்றும்

அருணகிரி நாதர்

" தந்த பசி தனையறிந்து முலைபமுது
நந்த முதுகு தடவிய தாயார்

என்றும்

கூறியவற்றுல் அறியக்கிடக்கின்றதன்றோ?

இப்படி வெகு பாடுபட்டு வளர்த்த தாய் தந்தைகட்கு சில மக்கள் துன்பத்தைப் புரிகின்றனர். மனைவி வந்தபிறகு மாதாபிதாக்களுடைய முகத்தைப் பார்ப்பதே கிடையாது. அவர்கட்குக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பதும் இவனுக்குச் சுமையாக இருக்கிறது.

காலையில் எழுந்தவுடன் தாய் தந்தையரை வசை பாடுகின்றனர். "தந்தை தாய்ப்பேண்" என்னும் அமுத வாக்கை மறந்து, தாய் தந்தையரைக் காப்பாற்றுமல், தன் மனைவியைப் பேணிக் காப்பாற்றுகிருர்கள்.

படிப்பித்த குரங்கு சொன்னபடி ஆடுவது போலவும், கூண்டில் அகப்பட்ட கிளி கற்றுக் கொடுத்தது போலக் கூறுவதும், மனைவி படுக்கையில் சொல்லிக் கொடுத்தபடி மாதா பிதாக்களிடத்தில் பேசுகிருன். தான் சம்பாதித்து அவர்களுக்கு ஒன்றும் தருவது கிடையாது; தனம்

வஸ்திரம் பூஷணம் எல்லாவற்றையும் மனைவி சரீர வுபயோகத்திற்கே சமர்ப்பிக்கிறான்.

அந்தோ! அருமையாகப் பெற்று வளர்த்த தாய் தந்தைகளின் ஞாபகமே வருகிறதில்லை. தாய்தந்தையரை வேலைக்காரர்கள் போல் நினைக்கிறார்கள்.

இன்னும் சிலமக்கள் தன் அழுக்கு வஸ்திரத்தைத் தோய்க்கும்படி தாயாருக்குக் கட்டளையிடுகிறார்கள்,

இந்த இரண்டு கிழட்டுப் பிணங்களும் தொலைந்து போகவில்லையே! என்று கூறுகின்றார்கள்.

நல்ல உணவு தருவது கிடையாது. நல்ல ஆடை தருவது கிடையாது.

தாய் தந்தையரைப் பார்க்கும்பொழுதே முணுமுணுக் கிறார்கள்.

மாதாபிதாக்கள் பசியால் வாடத் தானும் தன் மனைவி யும் வயிறு வெடிக்க உண்டு உறங்குகின்றனர்.

மனைவியின் இனிய வார்த்தையாகிய விஷங் கலந்த தேனைக் குடித்து அதனால் புத்தியை மாய்த்துக்கொண்டு வயதுமுதிர்ந்த பெற்றோர்களை நோக்கி,

"ஊருக்கு வருகிறது உங்களுக்கு வரவில்லையே!" என்று சினந்து அவர்களைத் தனியே அலையவிட்டுப் பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு தானும் தன் மனைவியும் வேறோரிடத்திற்குக் குடிபோகின்றனர்.

ஐயோ! கொடிது!! சிலர் மக்கள் பிதாக்களை அடிக்கிருர்கள். இவர்களா உருப்படப் போகிருர்கள்?

இதுவோ மக்களுக்கு அழகு?

இவர்கள் மனிதர்கள்தாஞ?

" மனிதனை மனிதனறிவான்
மடநாயைத் தடிக்கொம்பறியும் "

என்னும் பழமொழிக்கிணங்க, இவர்களை மாக்கள்தான் தம் இனம் என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் அல்ல என்பது இழுக்காகாது. பெற்ரோர்கள் செய்த உபகாரத்திற்கு இவர்கள் செய்வதா பிரதியுபகாரம்?

"நன்றி மறவேல்" என்னும் அருமைத் திருமொழிக்கு மேஞேக்காக சொற்பொருளை மட்டும் நோக்கிஞல் நீ தாய் தந்தைக்குச் செய்யவேண்டிய நன்றியை மறவேல் என்றும், உனக்குப் பெற்ரோர்கள் செய்த நன்றியை நீ மறவேல் என்றும் பழைய பாட்டி கூறியிருக்கின்ருள்.

" என்ெருரு பயன்றனை யுதவினேர் மனம்
கன்றிட லொருவினை கருதிடச் செய்வரேல்
புன்ெருழிலவர்க்கு முன்புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ ?"

என்னும் கந்தபுராணச் செய்யுளைச் சிந்திக்கப்படாதா? தாய்தந்தைகள் மனம் நொந்தால் வாழ்வார்களா?

"மாதா வயிறெரிய வாழா வொருக்காலும்"

என்று ஆன்ருேர் மொழிந்திருக்கின்றனரே! எவனெருவன் ஈன்ருேரை நிந்திக்கின்ருனே அவன் மறுபிறவியில் ஊமை யாகப் பிறக்கிருன்.

பெற்ருேர்கள் பசியால் வாட எவன் உண்டு உறங்கு கிருனே அவனுக்குத்தான் பைத்தியம் பிடிக்கிறது. கடுஞ் சொல் சொலலுகிறவனுக்கு நாக்குப் புற்று உண்டா கின்றது.

தாய்தந்தையைக் கோபத்தினுல் கண்சிவந்து பார்க் கிறவனுடைய கண்களை இயம தூதுவர்கள் அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளைக் கொண்டு குத்துகின்றனர்.

அவர்களுக்கு ஏவல் செய்யக் கூசின பாவியை இயம தூதுவர்கள் சுடுகின்ற தாமிர நீரை அவர்கள் சரீரம் நடுங்கி அலறும்படி அவர்கள் மீது வார்ப்பார்கள்.

எமபுரத்தில் படுகின்ற துன்பம் எழுதவொண்ணுது!

பாரதத்தில்

"குரவர் நல்லுரை மறுப்பினும்........
இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும்
இவர்களே நரகிலெய்துவார்"

என்று கூறப்பட்டுள்ளது.

ஆகவே தாய்தந்தைக்கு ஒருநாளும் துன்பம் செய்யப் படாது; அவர்கள் மனம் வருந்துமாறு யாதொரு காரியத்

தையும் செய்யப்படாது; அவர்கள் இஷ்டத்திற்கு மாருக நடக்கப்படாது; இரண்டாயிரம் வருடத்திற்குமுன்,

சங்கர பகவத் பாதாள் சன்னியாசம் பண்ணிக் கொள்ள நினைத்தார். ஆனல் அவருடைய தாயாரோ தன்னுடைய ஒரு பிள்ளைக்கு மணஞ்செய்து பார்க்க வேண்டும் என்று ஆசை யுள்ளவளாக இருந்தாள். ஆகையால் சன்னியாசம் வாங்கிக்கொள்கிறேன் என்று சொன்னல் தாயாருக்கு மிகவும் துக்கமுண்டாகுமே என்று நினைத்தாராம். ஆகவே பெற்ருேர் இஷ்டம் இல்லாமல் ஒரு காரியத்தையும் செயயப்படாது. ஒரு கருமம் புரிய ஆரம்பிக்கும்போது தாய் தந்தையை வணங்கியே தொடங்க வேண்டும்.

இதனைப் பிரம்மாவின் அவதாரமாகிய திருவள்ளுவர் முப்பால் கூறத்தொடங்கும்போது,

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

என்று தன் தாய்தந்தையாகிய ஆதியையும் பகவனையும் தோத்திரஞ் செய்து ஆரம்பித்தார் என்றும் ஊகித்தற் கிடமிருக்கிறதல்லவா?

காலையில் எழுந்தவுடன் பெற்ருேர்களைத் தூரத்தில் இருந்து வணங்கி அவர்கள் விரும்பினல் நெருங்கிவர வேண்டும். அவர்கள் சன்னதியில் நிமிர்ந்தும் பார்க்கப் படாது.

> வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
> நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
> றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
> முந்தையோர் கண்ட முறை
>
> —ஆசாரக்கோவை

மக்கட்குத் தாய்தந்தை கூறும் நல்வாக்கே வேத வாக்கு; பெற்றோர்களே மூன்றுலகங்களுமாவார்; தாய் தந்தையரைப் பூசிப்பதால் புண்ணிய லோகங்களைப் பெறு கிறார்கள்.

அவர்களைப் பூசிப்பதால் மூன்று லோகத்திலும் கீர்த்தி யுண்டாகிறது. அவர்களைப் பூசிப்பதால் மும்மூர்த்தியும் பரமசந்தோஷத்தையும் அடைகிறார்கள்.

தாய்தந்தையைத் தெய்வம்போல் நினைத்து சதா சர்வ காலமும் பூசிக்க வேண்டும். ஈன்றோரைத் தவிர வேறு தெய்வம் இல்லை. அவர்கள் சம்மதி பெறாமல் ஒரு தர்மத் தையும் செய்யப்படாது; தாய்தந்தைக்குப் பணிவிடை செய்வதே சிறந்த வேலையென்று பணி செய்யவேண்டும்.

> மாதரம் பிதாஞ்சைவ சாக்ஷாத்ப்ரத்யக்ஷ தேவதாம்
> மக்வாக்ருஹீநிஷே வேதாஸதாஸர்வ ப்ரத்நத:

என்றும், நீதிநெறி விளக்கத்தில்

> 'குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
> புதல்வர்க்குத் தந்தையும் தாயும்''

என்றும், நான்மணிக் கடிகையில்,

> ஈன்றாளின் என்ன கடவுளுமில்

என்றும், கூர்மபுராணத்தில்,

தாயினிற் சிறந்த தெய்வமில்லை தந்தைதன்னில்
ஏயநற் குருவுமில்லை யென்னில் மற்றிவர் கடாளில்
தூய்மலர் தூவிநாளுந் தொழுதிடு மறிஞர்தாமே
ஆய்கதிர் பிரப்புபொன் ஞட்டமாரா யினிதுவாழ்வார்

என்றும் கூறுமாற்றுலுணர்க.

கவுரவத்துக்குரிய யாவருக்குள்ளும், தாயே அதிக கவுரவத்துக்குரியவள்; அப்படியே தந்தை வானத்தைவிட அதிக உயர்ந்தவர்.

குருணுஞ்சைவஸர்வேஷாம் மாதாபரம கோகுரு:
மாதா குருதராபூமே: தாத்பிதோச் சதாஸ்ததா

என்று கூறப்பட்டுள்ளது. தாய் தந்தைகள் மனங் கோணுமல் நடத்தல்வேண்டும்.

வெந்நீரால் பெற்றோர்களுக்கு அபிஷேகஞ் செய்ய வேண்டும். அவர்கள் வஸ்திரத்தைத் தன் கரத்தினுல் தோய்க்கவேண்டும். அவர்களுக்கு இனிமையான உணவு தரவேண்டும். அவர்கள் உண்ட பிறகுதான் உணவு கொள்ளவேண்டும். பெற்றோர்களுக்குத் தன் கரத்தினுல் படுக்கை விரிக்க வேண்டும். பிதாமாதாக்களின் பாதத்தை மெல்லப் பிடிக்கவேண்டும்; ஈன்றோர்கள் உறங்கின பிறகுதான் உறங்கவேண்டும். அவர்களிடத்தில் நயமான வார்த்தை சொல்லல் வேண்டும். வயது முதிர்ந்த காலத்தில் தாய்தந்தைகள் படுக்கையிலேயே மலஜலங் கழித்தால் சிறிதுகூட அசங்காதமில்லாமல் முகம் சுளிக்காமல் சுத்தப்படுத்தவேண்டும். பவ்வீயம்பட்ட உடைகளையெல்லாம் தோய்த்து உலர்த்திவைக்க வேண்டும்.

புத்தி மாருட்டத்தால் ஏதேனும் தன்னை வைதாலும் அவையெல்லாம் ஆசீர்வாதமென்று நினைத்துச் சுடுமுகத் தைக் காட்டாமல் பொறுத்துக்கொளல் வேண்டும்; புத்தி தடுமாற்றத்தினுல் சில சமயம் தன்னை யடித்தாலும் "அப்பா! ஓங்கியடித்தால் அந்த அதிர்ச்சியினுல் தங்கள் கைவலிக்குமே" என்று இனிமையாகப் பரிவுடன் கூற வேண்டும்; பெற்ருேர்கள் செய்த நன்றிக்கு மக்கள் நூருண்டு வரைக்கும் தொண்டு புரிந்தாலும் ஒரு நாள் வளர்த்ததற்குச் சமானமாகாது.

ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கெவரேகைம்மாறி
யற்றிடுவார்
ஆன்ற மதலை நூறுவயதளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ள பொருண் முற்று மளித்து முறை
முறையே
ஒன்று வழியபா டியற்றியற்றிடினும் மொருநாள்
வளர்த்தற் கியையாதே
யம்மாதாபித்ரௌக்லேசம் ஸஹேதே சம்பவேத்ருணும்
நதஸ்ய நிஷ்க்ருதி ஸக்யாகர்தும் வர்ஷசதைரபி

என்பவற்ருலறிக.

தாய்தந்தைக்குப் பணிவிடை செய்வதே சிறந்த தவம்; பெற்ருேரை நிராகரித்துக் கானகத்திற் சென்று அருமையாகத் தவம் செய்தாலும் தேவர்களும் முனிவரும் இகழ்வார்கள். காசி காண்டத்தில்,

"*தந்தை தாய் பணிதல் செய்யுந்தவ மலாறவம் வேறில்லை*"

என்றும், உபதேச காண்டத்தில்,

ஈன்றதாயின் ஈன்றெடுத்திரு புயத்தணைக்கும்
ஆன்ற தந்தையை யாந்தைசெய் தகன்று போயடவி
தோன்றி மாதவந் தொடங்கினேரிவர்களைத் தொல்லை
மூன்று தேவரு முனிவுறறிரய முற்றிழிவார்.

வருமாறு காண்க.

ஆகவே பெற்றோர்கள் எந்தக் குடிசையில் வாழ்கின்றனரோ அந்தக் குடிசையே சிறந்த கோயில்! அவர்கள் கூறும் நல்லுபதேசமே சிறந்த மந்திரம்! அவர்கள் வாழுகின்ற நாடே அமரர் வாழும் பொன்னாடு.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"
"தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை"
"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

என்னும் அருள்வாக்குகளை நினைமின்கள்; அவர்கள் காலதிசையடைந்த பிறகு, நீர்க்கடன்களை முறைப்படி செய்ய வேண்டும்; ஊரிலுள்ளோ ரனைவரும் இக் குழந்தையைப் பெற்ற தாய் தந்தைகள் "என்ன மாதவஞ் செய்தனரோ" எனப் புகழ,

மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்

என்ற பொய்யில் புலவர் திருவாக்கிற்கு இலக்கியமாகத் திகழ்தல் வேண்டும்.

வாய்மை

வாய்மை என்பது உள்ளமும் வாக்கும் ஒத்திருத்தல் என்றனர் மனு. வாய்மை என்பதனை வடநூலார் சத்தியம் என்பர். கடவுள் சத்திய வடிவாக விளங்குகின்றனர். சத்தியத்தைக் கடைப்பிடித்த ஒருவனை மூவர்களாலும் வெல்ல முடியாது. பஞ்ச பூதங்களும் அவனை யணுக அஞ்சுகின்றனர். கடல் சூழ்ந்த உலகில் எல்லோருடைய உள்ளத்திலும் ஒருவனுறைய வேண்டுமாயின், உண்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். விளையாட்டிற்குப் பொய் கூருத நன்னெறியுடையான் எக்காலத்தும் எல்லாரும் மனத்தின்கண் வைத்துப் போற்றத் தகுந்தவனுகின்றுன். "பதியிழந்தனம், பாலனை யிழந்தனம், பெற்ற நிதியிழந்தனம், இனி நமக்குண்டென நினைக்கும் கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலன்" என்று வாய்மை என்னும் பெருமலையின் உச்சியில் நின்றுரைத்த அரிச்சந்திரனை உணராதார் யாவர்? அவன் உறையாத உள்ளமும் உளதோ! அன்றும் இன்றும் என்றும் அவன் உலகில் எல்லோ

ருடைய உள்ளங்களிலும் நிலே பெற்றிருக்கிருன்; இதனைப் பொதுமறை விளக்குமாறு காண்க.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்

—திருக்குறள்

மெய்யே பேசுகிறவனுடைய மனமானது எப்போதும் சாந்தியாகவும் கவலேயற்றுமிருக்கும். அவனுடைய முகமானது தெளிந்து உண்மையின் ஒளி நிறைந்து விளங்கும். பொய் கூறுவோனது மனம் ஒரு காலத்தும் சாந்தி யடையாது. நாம் சொன்ன பொய் எங்கே வெளியாகி விடுகிறதோ என்ற ஏக்கம் ஒரு பொய்யை நிலேநிறுத்த அநேக பொய் கூறி முடிவில் பல இன்னல்களுக்காளாகி தன்னெஞ்சே தன்னேச் சுடக் காற்றில் வைத்த தீபம் போல் அசைகின்ற மனத்தை யுடையோனுய்ப் பிறராலும் இகழப் படுகின்ருன்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னேச் சுடும்

—திருக்குறள்

ஒருவன் ஒரு பொய் கூறி மீண்டும் பல உண்மைகளேக் கூறினுலும் அவ்வுண்மைகளும் பொய்யோ எனப் பிறர் ஐயுறுவர். பொய்யே பேசும் பன்மையோரை வறுமைப்பிணி வந்து வாட்டும். தெய்வத் திருவருளுண்டாகாது. பொய்யுடையான வாக்கால் உச்சரிக்கும் மந்திரங்களும் பலனே நல்கா. பொய் கூறுபவன் புரியும் தவமும், தருமமும் சூரியன் முன் மின்மினிபோல் மங்கு

கின்றன. ஒரு கோடி பொன் தருவதாகக் கூறினும் பொய் கூறுதல் தகாது.

கோடானு கோடி கொடுப்பினுந் தம்முடைய நாக்
கோடாமை கோடி பெறும்

—ஔவை

பீஷ்மரானவர் தன் பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ''விவாகம் செய்துகொள்வதில்லை'' என்றும், ''மனத்தாலும் மாதரைத் தீண்டேன்'' என்றும், சபதம் புரிந்தனர். பின்னர் ஒரு காலத்தில் அவருடைய சிற்றன்னையாகிய சத்தியவதி பீஷ்மரை நோக்கி, ''மைந்தா! நம்முடைய சந்திரகுலம் சந்ததியற்றுவிடுகிறது. குலத்தை விருத்தி செய்யும் பொருட்டு நீ கன்னிகையை மணந்து உலகத்தை யரசாண்டு புதல்வரைப் பெறுவாய்'' என்றனள். அச்சமயம் சத்தியவதிக்கு பீஷ்மர் கூறிய உறுதிமொழிகளை அன்பர்கள் உற்று நோக்குக. பீஷ்மர், ''அம்மா! இந்த மூன்று உலகங்களையும் இன்னும் இவற்றிற்கு மேலாய எதையும் நான் இழந்துவிடுவேன்; சத்தியத்தை மட்டும் நான் தவிரேன். மண் தன்னியற்கைக் குணமாகிய கந்தத்தையும், நீர் தனது தண்மைக் குணத்தையும், அனல் வெம்மை ஒளி முதலிய குணங்களையும், வாயு பரிச குணத்தையும், சூரியன் தன் காந்தியையும், சந்திரன் தன் குளிர்ச்சியையும், ஆகாயம் சப்த குணத்தையும், அறக் கடவுள் தனது தரும குணத்தையும் இழந்துவிடினும் விடலாம். நான் மட்டும் சத்தியத்தை ஒரு போதும் விடேன்'' என்றனர். என்னே அவரது உறுதி!

வேறொரு சமயத்தில் காசிராஜன் மகளாகிய அம்பா என்பவளை மணந்துகொள்ளுமாறு பீஷ்மருடைய குரு நாதராகிய பரசுராமர் பீஷ்மரை மன்றாடிக் கேட்டுக்கொண்டனர். அக்கால் பீஷ்மர் பரசுராமரை நோக்கி, "குருநாதா! என் தந்தை பொருட்டு மாதரை மணம் புரிவதில்லையென முன்னரே விரதங் கொண்டுளேன்.

" இன்சொலாலவனி கொண்ட மெந்தை
முதலின்பமன் றலினிதெய்த நான்.
வன்சொலால் விரத மணமுறெனென
மனத்தினுல் விரதன் மன்னினேன் "

தாங்கள் எனக்குக் குருமூர்த்தி; தங்களைத் தவிர எனக்குச் சிறந்த தெய்வமில்லை. விவாகம் புரிவதில்லை என்ற சொல்லை ஒருபோதும் வழுவேன். அடியேனுடைய உயிரை வேண்டுமாயினும் தருவேன்.

" வளம்புனைந்த அனுராக போகமிகு மாதர்
மங்கையர் பொருட்டினுல்
விளம்புமிந்தமொழி மொழிக வென்றனுயிர்
வேண்டுமெனினும் வழங்குவேன் "

என்ற உறுதி மொழிகளையும் நினைக்காதிருக்க முடியுமா? உயிரினும் உண்மையே சிறந்தது. ஆவிக்கு மோசம் வரினும் சத்தியத்தை விடப்படாது.

கதிரவன் மகனுகிய கர்ணனது உடம்பில் உயிருக்கு ஆதாரமாய் கவசமும் குண்டலமுமிருந்தன. அக்கவச குண்டலங்கள் அவன் உடம்புடனே பிறந்தவை. அவை உடம்பிலுள்ளவரை அவனை அழிக்க முடியாது. கவச

குண்டலங்களை நீக்கினாலன்றி அர்ச்சுனன் வெற்றியடைய மாட்டான். எனவே அக்கவச குண்டலங்களைப் பெற்று தனஞ்சயனுக்கு வெற்றியை நல்கும் பொருட்டு தேவர் கோமானாகிய இந்திரன் கிழப்பிராமண வடிவந்தாங்கி கர்ணனிட மடைந்தான், தினந்தோறும் காலையில் சூரியன் உச்சியினின்று திரும்பும்வரை கிழக்கே நோக்கி ஜபம் செய்வது கர்ணனுடைய வழக்கம். (அதாவது முதுகில் வெய்யில் சுடுகின்ற வரை ஜபிப்பது) அச்சமயத்தில் யாவர் எதைக் கேட்கினும் தருவது என்பது அவனுடைய உறுதியான எண்ணம். அந்தச் சமயத்தில் கிழவடிவங் கொண்ட இந்திரன் வந்து, ''எனக்கு வேண்டிய ஒன்றை நின்பால் பெற வந்தேன்'' என்றனன். கர்ணன் ''என்னிட முள்ள பொருள்களில் எதைக் கேட்கினும் தாமதியாது தருவேன்'' என்றனன். உடனே இந்திரன் ''உன் உடம் போடு பிறந்துள்ள கவசகுண்டலங்களைத் தருதி'' என் றனன். கர்ணன் ''நீ வேதியனன்று; தேவர் தலைவனாகிய வலாரியென உணர்ந்தேன். இந்தக் கவசத்தை உனக்குக் கொடுப்பதால் அர்ச்சுனனை வெல்லுவதற்கென எனக் கிருந்த இந்த ஒரே வழியையும் இழந்தவனாகின்றேன்; என் ஆவிக்குத் துணையானது இக்கவசம்; ஆயினும் நினக்கு எதுவாயினுந் தருவேன் என்ற சத்திய வசனத் தைத் தவறேன்; உயிரினும் உண்மையே சிறந்தது; நீ கேட்டவைகளைத் தருகிறேன்'' என்று உடனே வாளா யுதத்தால் தன் உடம்பினின்றுஞ் சேதித்துக் கவசத்தையும் குண்டலத்தையும் கொடுத்து அழியாப் புகழை எய்தினன்.

பண்டைக் காலத்தில் உண்மையை எங்ஙனம் காப்பாற்றினார்கள் என்பதைச் சிந்தியுங்கள். பொய்

யாமை என்ற ஒரு சிறந்த குணம் ஒருவனிடத்து நிலேக்குமேயாமாயின் ஏனைய நற்குணங்கள் அவனிடம் தானேயமையும். உள்ளந் தூய்மையடைய வேண்டுமேல் வாய்மை யென்கிற தண்ணீரைப் பெறவேண்டும். புற அழுக்கை நீரால் அகற்றுவது போல் அக அழுக்கை வாய்மையால் அகற்றவேண்டும். அகத்தேயுள்ள அஞ்ஞான இருள் நீங்க வேண்டுமாயின் உண்மையென்கிற திருவிளக்கைக் கொளுத்தவேண்டும்.

இவ்வுண்மைகளே யெல்லாம் நமக்கு நன்கு புலனுமாறு திருவள்ளுவர் தெரிவிக்குமாறு காண்க.

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.
புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்

சத்தியமென்பது என்றும் அழிவில்லாதது. சகல தருமங்களுக்கும் உறைவிடமாவது. சத்தியமே வெற்றியைத் தரும். சத்தியவான்களிடத்தில் இலட்சுமி என்றும் நீங்காதுறைகிருள். சத்தியமே தவம்; சத்தியமே யாகம்; சத்தியமே கடவுள்; சத்தியமே உலகமெங்கும் ஓங்கி வளர்ந்து தழைக்க.

விருந்து

விருந்து என்பது புதுமை என்று பொருள். புதிய ராகத் தம் வீடு தேடி வந்தவர்களுக்கு விருந்து என்று பேர். அவ்விருந்தினர் இரு வகையினராம். முன்னறி முகமுற்று வந்தோரும், அஃதின்றி வந்தோருமாவார். மனையாளோடு கூடி இல்லறத்தின்கண் இருந்து மனைவி மக்கள் முதலியோரைக் காப்பாற்றி வாழ்வது எதன் பொருட்டு எனின், தனது வீடு தேடி வருகின்ற விருந்தின ரைப் பேணி அவர்களுக்கு உபசாரஞ் செய்வதற்கே யாம்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

—பொய்யாமொழி.

விருந்தினர்கள் வந்து தங்குவதற்கென்றே நம் முன் னோர்கள் வீடு கட்டுகின்றபோது திண்ணையென்று ஒரு பாகத்தை ஒதுக்கி வைத்தார்கள். மழைக்கு ஒதுங்கவும் ஏழைகள் படுக்கவும் விருந்தினர் இருந்து இளைப்பாறவும்

திண்ணை உபயோகமாம். விருந்தினர் என்ருல் யாவர்? உலகில் அநேகர் தங்கள் வீட்டில் மாமனோ, மைத்துனனோ, வேறு பந்துக்களில் ஒருவரோ வந்தால் விருந்து வந்தது என்று கூறுகின்றனர். உறவினரும் சிநேகிதரும் விருந்தினரல்லர். புதியராக வந்தவரே விருந்தினராம். அங்ஙனம் வந்த விருந்தினரைப் புறத்தில் வைத்துவிட்டு இறவாத தன்மையை நல்கும் தேவாமிர்தமேயாயினும் உண்ணப்படாது.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

—பொய்யாமொழி

நாள்தோறும் தன்னை நோக்கி வந்த விருந்தினரை உணவு கொடுத்து உபசரித்துப் பாதுகாப்பவனுடைய இல்வாழ்க்கையானது வறுமையினல் துன்புற்று வருந்தாது. பொருள் கிடைத்தவுடன் அப்பொருளை வறிதே புதைத்து வைக்காது விருந்தினரைக் கண்டவுடனே இனிய முகத்துடன் நல்வரவு கூறி அவர்கள் பசியைத் தீர்த்து உதவி செய்வானது மனையின்கண் திருமகள் (இலட்சுமி) தான் தந்த பொருளை நல்வழியில் செலவு செய்கிருனென்று மேலும் நிறைந்த செல்வத்தைத் தந்து மனம் பொருந்தி வீற்றிருப்பாள்.

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்

—பொய்யாமொழி

விருந்தோம்புவான் வீட்டில் திருமகள் என்றுமிருந்து துணை செய்தல் போல் நிலகளும் துணை செய்

வாள். ஒரு விருந்து வந்தால் ''திண்ணையிலிரு; நாங்கள் உண்டு மிகுந்தால் போடுகிறோம்'' என்று சிலர் சொல்லு கிறார்; அது தவறு. விருந்தினரைப் பசியோடு இருக்க வைத்து ஒருபோதும் உண்ணப்படாது. முன்னே விருந் தினரை உண்பித்து பின்னர் மிகுந்திருந்த உணவை உண்ணுவோனுடைய விளைநிலம் வித்திடாமலே விளையும். ஒரு சிலருடைய வயலில் பயிர் சாவியாகிவிடுகிறது; ஒருசிலருடைய வயல் நன்றாக விளைகிறது; இதற்கு என்ன காரணம்? முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் விருந்தோம்புவான் விளைநிலம் நல்ல பயனைத் தருகிறது. விருந்தினரைக் கடிந்து பேசித் துரத்தினோனது வயலில் விருந்தினர் முகம் வாடியது போல் பயிரும் வாடிப் பயனைத் தருவதில்லை. ''பண்ணிய பயிரில் புண்ணியந் தெரியும்'' என்ற முதுமொழியையும் உற்று நோக்குக,

இல்வாழ்வான் அவசியம் செய்யத்தக்கவை ஐம்பெரும் வேள்விகள் என்பவை.

(1) பிரம வேள்வி—வேதமோதல்

(2) பிதிர் வேள்வி—பிதிர்க்கடனுற்றல்

(3) தேவ வேள்வி—தேவதைகளைக் குறித்துத் தீவேட்டல்

(4) பூதவேள்வி—காக்கைக்கிடுதல் முதலியன.

(5) மானுட வேள்வி—விருந்தோம்பல்.

ஒண்பிரமவேத மோதுதல் ஓமம் வளர்த்தல்
எண்தெய்வம் ஈதல்பலி யேபூதம்—ஒண்டொடியீர்
எண்ணீர்க் கடனுற்ற லேபிதிர்விருந் தோம்பல்
அண்ணீர்மை மானுடையா கம்.

இப்பஞ்ச மகாயாகங்களில் விருந்தோம்பல் என்னும் மானுட யாகமே மிகவும் முக்கியமாம். இல்வாழ்வார் ஒவ்வொருவரும் அதனை அவசியம் செய்ய வேண்டும். தன்னிடத்தில் வந்த விருந்தினரைப் பேணி இன்னும் விருந்து வருமோ என்று எதிர்பார்க்கும் உத்தமன் வானுலகம் செல்லுங்கால் தேவர்கள் நமக்கு நல்ல விருந் தென்று எதிர்கொள்வர். எனவே விருந்தை இகழாது உபசரிப்பான் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை யடைவன். வடவைத்தழல் போன்று அக்கினியா எதிர்ப்பட்டபோது சந்திரமதி ''என் வீடு நாடி வந்த விருந்தினரை இகழ்ந்திருந்ததுண்டேல் என்னைச் சுடுவா யாக'' என்று அவ்வக்கினியாற்றில் பாய்ந்தனள். அக் கினி பன்னீர்போற் குளிர்ந்திருந்தது. விருந்தோம்பலின் பெருமைதான் என்னே! என்னே! செல்வமுடையோர்கள் தான் விருந்தினரை உபசரித்து உணவளிக்க வேண்டும் என்பதில்லை; வறிஞர்களும் விருந்தோம்ப வேண்டும். ''வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை'' என்ற நறுந் தொகைப்படி எத்துணைச் சிரமமிருந்தாலும் நித்திய தரித் திரர்களாக இருக்கினும் தமது சக்திக்குத் தக்கவாறு விருந்தினரை உபசரிக்க வேண்டும். குசேலரைக் காட்டி லும் தரித்திரர் இல்லையா? இருபத்தேழு மக்களுடன் குசேலருடைய மனைவியார் தரித்திரத்தாலே எவ்வளவு துன்புற்றனர். அவ்வம்மையார் தன் வீடு தேடி வந்த விருந்தினருக்கு இல்லையென்று கூறவில்லை என்றால், என்னே அவ்வம்மையாரின் கருணை! அந்த மாதரசியைப் பற்றி அந்நூலாசிரியர் புகழ்ந்துரைக்குமாறு காண்க.

'' மாசிலாக் குலத்து வந்தாள்; வருவிருந்து வப்பவூட்டு
நேசமிக்குடையாள்; கொண்கனினைப்பறிந்தொழுகு நீராள்'

பண்டைக் காலத்தில் பறவைகள்கூட விருந்தோம்பி யுள்ளன. ஈண்டு அவ்வரலாறுகளில் ஒன்றை எடுத்துக் காட்டுதும்.

ஒரு பெரிய வனத்தில் கொடிய வேடன் ஒருவன் இருந்தனன். இனிய ஓசைகளைச் செய்து பறந்து வானத்தை வனப்புறப் புரியும் பறவைகளையும் விலங்கு களையும் கொல்வதே அவனுடைய தொழில். கருத்த உடம்பும் சிவந்த கண்களுமுடையோனாய் வில்லையும் அம் பையுமேந்திய கரத்துடன் கூற்றுவனைப் போல் அவ்வனத் தில் உலாவி, பல உயிர்களுக்குத் தீங்கு புரிந்துகொண் டிருந்தனன். அவன் ஒரு நாள் நாற்புறத்தும் பெருமலைகள் சூழ்ந்துள்ள மலைச்சரிவில் வேட்டையாடிக் கொண்டிருந்த சமயத்தில், திடீரென மேகங்கள் கூடி பேரிடியுடன் பெரு மழை பொழிந்தது; எங்கனும் நீர்மயமாயிற்று. வழிகளெல் லாம் காட்டருவிகளாயின. மேட்டுப் பாங்கரில் சிங்கம் முதலிய பெரு மிருகங்கள் இருந்து ஒலிக்கின்றன. இந்த ஆபத்தான இடத்தில் மழையாலடிபட்ட வேடனுடைய உடலும் உடையும் நனைந்து ஈரமாயின. எனினும் அவன் மனதில் மட்டும் சிறிதும் ஈரமாகவில்லை. அத்தருணத்தில் ஒரு பெண் புரு காட்டாற்றில் அகப்பட்டு ஒருவாறு கரையில் ஒதுக்கப்பட்டு குளிரால் வாடி சிறகுகள் நனைந்து பறக்குந் தன்மையற்றுக் கிடந்தது. அதைக் கண்ட வேடன் உடனே அதை எடுத்துச் சற்றும் கருணையின்றித் தனது கூட்டிற்குள் அடைத்துக் கொண்டனன்.

பின்னர் மழைவிட்டவுடன் மெல்ல நடந்து அவ் வனத்தின் மையத்திலுள்ள பெரிய மரத்தினிடம் சென்

றனன். அத்தரு பல கிளைகளுடன் வானுற வோங்கி வளர்ந்து பல பறவைகளுக்கு உறைவிடமாகி நிழலையும் ஆதரவையும் தருவதாயிருந்தது. குளிரால் வாடிய வேடன் அத்தருவினடியிற் சென்று சற்று இளைப்பாறினன். மேகங்கள் விலகி விண்ணிடை உடுக் குலங்கள் (நட்சத் திரங்கள்) ஒளி செய்தன. வேடனுடைய வீடு நெடுந் தூரத்திலிருந்தபடியால் அவன் வீட்டிற்குச் செல்ல முடி யாதவனுகி, அவ்விரவை அம்மரத்தினடியிலேயே கழிக்க எண்ணினன். அச்சமயம் அத்தருவின் மேலிருந்த ஆண் புருவானது கண்ணீர் சொரிந்து புலம்பலுற்றது. "அந்தோ! என்னருமை மனையாளே! நீ இன்னும் திரும்பி வரவில்லையே! உனக்கு யாது விபத்து நேர்ந்ததோ? மழையில் அகப்பட்டுக்கொண்டு எங்கு தவிக்கின் றனையோ? ஒளியுடைய மலர்ந்த கண்களும், தேன் போன்ற இனிய குரலும், மிருதுவான சிறகும் உரிய உன்னைத் துறந்து இவ்வுலகில் எனக்கு என்ன வாழ்விருக்கிறது? இதுகாறும் நீ கூட்டிற்கு வராமல் எங்குற்றனை? யான் உண்டபின் நீ உண்பாய்; யான் மகிழ்ந்தால் நீ மகிழ்வாய்; யான் வருந்திஞல் நீ வருந்துவாய்; எனது சுகதுக்கங்களை உன்னுடையதாக எண்ணுகின்ற உன்னை யொழித்து யான் உயிர் தரியேன்; நீ இல்லையேல் இது வீடன்று; நான் ஒரு சமயத்தில் கோபித் தாலும் நீ இனிய ஒழுக்கத்தால் சாந்தப்படுத்தி உபசரிப் பாயே! இல்வாழ்வானுக்குச் சிறந்த மித்துரு பத்தினி யல்லவா? நீ எங்குற்றனை! என்று பலவாருகப் புலம்பிற்று. இவற்றை வேடனும் அவ்வேடன் கூட்டிற்குள் அடைபட் டிருந்த புருவின் மனைவியாகிய பெண் புருவும் கேட் டார்கள். பெண்புரு, தனது நாயகன் தன்மீது வைத்துள்ள

அன்பை நினைத்து மகிழ்ந்து ஆண்புருவை ''ஆர்வல! நான் வினைவயப்பட்டு இவ்வேடனுடைய கூட்டில் அடை பட்டிருக்கிறேன்; நாம் வாழுகிற இடத்திற்கு இவ்வேடன் அதிதியாக வந்திருக்கிறான்; வந்த விருந்தினரைப் பேணு வது இல்லறத்தான் கடமை. வேடன் குளிரால் வருந்தி, பசியால் வாடியிருக்கின்றனன்; வீடு தேடிவந்த விருந் தினரை நாயகனும் நாயகியும் உபசரிக்க வேண்டும்; தங்கள் பத்தினியாகிய என்னை இவ்வேடன் கூட்டில் வைத்திருக்கிறான். தாங்கள் வேடனுடைய குளிரை நீக்கி உணவைக் கொடுத்து உபசரியும்; ஒரு அதிதி எந்த இல்லறத்தானிடத்தில் வந்து பட்டினியாக இரவைக் கழிக் கிறானோ அந்த இல்லறத்தான் மீளா நரகத்திற்கு ஆளாகி றான். விருந்தினரது பசியை நீக்கிப் பாதுகாத்தவன் புத் தேளிர் வாழுமுலகிற் புகுவன். தாங்கள் அதிதி பூஜையைப் புரிந்து இகபர நலனை எய்தும்'' என்று கூறியது.

இந்தத் தரும வசனங்களைக் கேட்ட ஆண் புரு தனது பத்தினி கூட்டில் அடைபட்டிருப்பதைக் கண்டு வருந்தி, தனக்கு இடர்செய்த வேடனை அதிதியாக உதவிசெய்யக் கடப்பாடுடையோம் என்று அவனுக்கு உணவு தருமாறு வேண்டும் தன் பத்தினியின் உயர் குணங்களை எண்ணிப் பெரு மகிழ்வுற்று, அதிதிகளை ஆராதிப்பதே சிறந்தது என்று மரத்தைவிட்டிறங்கி வேடனை நோக்கி, ''ஐயா! உனக்கு நல்வரவு, எமது வீட்டுக்கு வந்த நீர் பட்டினியிருப் பது நலமன்று; சற்று தாமதியும்'' என்று முகமன் கூறி, உலர்ந்த சருகுகளையும் சிறு குச்சிகளையும் ஒன்றாகச் சேர்த்து, அருகிலிருந்த சிற்றூருக்குச் சென்று ஒரு கொள் ளித் துரும்பை அலகினுற் கவ்விக்கொண்டு வந்து,

குவித்துவைத்த சருகுகளின் மத்தியில் வைத்து சிறகால் காற்றுவர விசிறி நெருப்புண்டாக்கி, "ஐயா! இந்த நெருப்பினருகிலிருந்து குளிரை நீக்கிக்கொள்ளும்" என்றது. வேடன் அதன் அன்பையும் ஆதரவையும் எண்ணி உள்ள மகிழ்ந்து தீக்காய்ந்து குளிரை நீக்கிக்கொண்டனன். அவன் தீக்காய்ந்துகொண்டிருக்குங் காலை புரு சிறு குச்சிகளைக் கொண்டுவந்து நெருப்பில் போட்டுக்கொண்டேயிருந்தது. பின்னர் ஆண்புரு வேடனைப் பார்த்து, "ஐயா! பகற் காலமாக இருக்கின் பழங்களைக் கொண்டு வந்து உனக்கு உணவாகத் தருவேன்; இந்த இராப் பொழுதில் வேறு உணவைத் தேடிக் கொடுக்க முடியாது; விருந்தினரைப் பேணி உணவு கொடுத்து ஆதரிப்பதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை என்பது பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதோ எரிகின்ற நெருப்பில் வீழ்ந்து மடிகிறேன்; என்னுடைய மாமிசத்தைப் புசித்து பசிப்பிணியை நீக்குதி" என்று இனிமையாகக் கூறி அக்கினியை வலம் வந்து அதில் வீழ்ந்து மடிந்தது.

அதுகண்ட வேடனுக்கு நல்லுணர்வு தோன்றியது. அந்தப் புருவின் அன்பையும் அறத்தையும் விருந்தை உபசரிக்கும் பெருந்தகைமையையும் எண்ணி எண்ணி இரும்பூதுற்றனன். அந்தப் புருவின் செயற்கருஞ் செயல் வேடனுடைய கடின சித்தத்தைக் கரைத்து உவக்கியது. அவனது மனத்தில் நெடுநாளாகத் தழைத்துவந்த கோபம், கொலை, குரூரம், கொடுமை முதலிய மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தது. அன்பு ஊற்றெடுக்க ஆரம்பித்தது. அந்தோ: நான் இத்தனை நாளாகக் கொடிய

பாவமாகிய கொலைத்தொழிலைப் புரிந்து மீளா நரகத்திற்கு வழி தேடிக்கொண்டேனே. எத்தனை உயிர்களைப் பதைக்கப் பதைக்கக் கொன்றேன். கருணை சிறிதுமில்லாப் பாவி யானேன்; ஆ! ஆ! இந்தப் பறவையின் உத்தம குணத்தை யாரே மறக்க முடியும்? மனிதனுகப் பிறந்த என்னிடத்தில் இந்தப் பரோபகாரம் இல்லையே! நான் மனிதனல்ல; விலங்கானேன். இப்புரு பறவையன்று; உயர்ந்த மனிதன். ஏ பட்சியே! நீ எனக்கு சற்குரு; ஒரு கணத்தில் என் னுடைய கடின சித்தத்தைக் கரைத்து நல்லுணர்வை நல்கினுய். இனி நான் ஒரு உயிருக்கும் தீங்கு புரியேன். கொலைத் தொழிலை இக்கணமே ஒழித்தேன். மறந்தும் பிறன்கேடு சூழேன்; இதுகாறும் புரிந்த எண்ணிறந்த மறச் செயல்களுக்குப் பரிகாரந் தேடுவேன்'' என்று கண் கலுழ்ந்து கதறிய வண்ணமாய் வாய்விட்டுப் புலம்பி, கரத்திலிருந்த வில்லையும் கூரிய கணைகளையும் இரும்புக் கூடுகளையும் வலைகளையும் வீசி எறிந்தனன். கூட்டி லிருந்த பெண் புருவையும் விட்டுவிட்டனன். தான் செய்த தீச்செயலை எண்ணி எண்ணி மனம் வருந்தி நின்றனன். கூட்டிலிருந்து வெளிப்பட்ட பெண் புரு கணவனிறந்த சிதாக்கனியை வலம் வந்து கதறி யழுது, ''ஆ! என் உயிர்க்காதல! உன்னைப் பிரிந்து இவ்வுலகில் யான் வாழேன்; பெண்களுக்குக் கணவனே கதி; கணவனே வாழ்வு; கணவனைப் பிரிந்து உயிர் வாழமாட்டார்கள்; நீ சென்ற வானுலகத்திற்கு யானும் வருகிறேன்'' என்று புலம்பி, வேடனை நோக்கி, ''ஐயா! நீயோ மிகவும் பசித் திருக்கின்றனை; எனது நாயகனது இறைச்சி உன் வயிற் றுக்கு நிரம்பாது; யானும் இத்தீயில் வீழ்கிறேன்; என்னை

யும் உண்டு இளைப்பாறுவாய். அதிதிகளைப் பூசிப்பதே எமது கடமை'' என்று மொழிந்து வீழ்ந்திறந்தது.

உடனே இவ்விரு பறவைகளும் விருந்தோம்பலின் பயனாகச் சூட்சும உருவத்துடன் வானோர் எதிர்கொள்ள சுவர்க்க லோகத்திற்குச் சென்றன. அக்காட்சியைக் கண்ட வேடன் வியப்புற்று விருந்தோம்பலின் பெருமையை யுணர்ந்து, சதிபதிகளின் ஒற்றுமையையும், பரோபகாரத்தின் தகைமையையும் எண்ணி நல்வழிப்பட்டு முற்றிலும் மாறிய எண்ணமுடையவனாய் ஈசுவரனை நோக்கித் தவம் புரிந்தவனாயினன்.

விருந்தோம்புதற் பொருட்டு பறவைகளாயிருந்தும் அப்புறுக்கள் எவ்வளவு அன்புடன் தமது உடல்களையே உணவாகக் கொடுத்தன. விருந்தோம்புவதைக் காட்டிலுஞ் சிறந்த தருமமில்லை. செல்வம் வந்தவுடனே அதன் நிலையாமையை யுணர்ந்து இருக்கும்போதே, பகிர்ந்தளித்து பல்லாரோடும் உண்டு இம்மை நலனையும் மறுமை நலனையும் பெறவேண்டும். தானும் உண்ணாது பிறர்க்கும் கொடாது பொருளை வைத்துக் காப்பாற்றினேன். முடிவில் வீணே இறந்து இகபர நலன்களை இழந்துவிடுகின்றனன். உயிர் பிரிகிற தருவாயில் நம்முடன் மறுபிறப்பிலும் வந்து துணை செய்வது எது? நாம் புரிந்த அறமேயல்லவா? 'துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டு பகடு நடந்தகூழ் பல்லாரோடுண்க'' என்ற நாலடியாரின் நன்மதுர வாக்கையும் நாடுக. அங்ஙனம் விருந்தோம்புங்கால் இனிய மொழிகளும் குளிர்ந்த முகமும் உடையவராயிருத்தல் வேண்டும். மோந்தால் வாடுங்

தன்மையுடையது அனிச்சமலர்; சிறிது முகம் சுளித்துப் பார்த்தால் விருந்தினர் முகம் வாடும். அவ்வளவு மேன்மையுடையது விருந்து.

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

—திருக்குறள்.

ஆதலால் இல்வாழ்வார் யாவரும் மலர்ந்த முகத்தோடும் இனிய மொழிகளுடனும் விருந்தோம்பி இகபர சௌக்கியங்களை எய்துவாராக.

சுவர்ச்சலை

"குருடுங் குருடில்லாத வனுமான
கொழுநனை விரும்பிய கொம்பனாள்"

தேவலர் என்று ஒரு பிரம்மரிஷி இருந்தார். அவர் சகல சாத்திரங்களையும் நன்கு ஆராய்ந்தறிந்தவர், தவமே தனமாகக் கொண்டவர். எப்பொழுதும் ஈசுவர தியானத்திலேயே இருப்பவர். அவருக்கு இலக்குமி போன்ற எழிலும், நல்ல கீர்த்தியும், இனிய குரலும் உடைய சுவர்ச்சலை என்னும் ஒரு பெண் இருந்தாள். அப்பெண் விவாகத்திற்குரிய பருவத்தையடைந்ததும் தந்தையான தேவலர், மகளுக்கேற்றபடி வேதங்களையுணர்ந்தவனும், பெரிய தவசிலாக்கியனும், சாந்த சீலனுமான வரன் எங்கு கிடைப்பானென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்.

அவருடைய எண்ணத்தையறிந்த சுவர்ச்சலை, "தவத்திற் சிறந்த தந்தையே! குருடுங் குருடில்லாதவனுமான கொழுநனுக்கு என்னைக் கொடுக்க வேண்டும்.

இதனை மறுக்க வேண்டாம். இது என்னுடைய விருப்பம்'' என்று இரகசியத்திற் சொன்னாள். அதனைக் கேட்ட தந்தை, ''குழந்தாய்! உன்னுடைய விருப்பம் நிறை வேற்றக் கூடியதன்றென எனக்குத் தோன்றுகிறது. குருட்டுத் தன்மையென்றுங் குருட்டுத் தன்மையில்லாமை யென்றுஞ் சொல்லும் இவ்வார்த்தை எனக்கு விகாரமாக இருக்கிறது. அழகிய கண்ணுள்ளவளே! பித்துக் கொண் டவள் போல் அமங்கலமான வார்த்தையைப் பேசுகிறாய்'' என்றனர். சுவர்ச்சலை ''அப்பா! நான் பித்துப் பிடித்தவ ளல்லேன். கூர்த்த மதியைக் கொண்டே கூறுகிறேன். யான் கூறிய இலக்கணமுடைய பதி என்னைக் காப்பாற்று வார். அந்தணர்களை இவ்விடமழைத்து வாரும். அவர் களுள் எனக்கு விருப்பமான நாயகனை வரிக்கிறேன்'' என்றாள்.

முனிவர் அவ்வாறே செய்கிறேன் என்று கூறி மாண வர்களை நோக்கி, ''சீடர்களே! வேதாகமங்களை நன்கு பயின்றவர்களும் ஆசாரமுடையவர்களும் குலத்திலுயர்ந்த வர்களும், தாய் வழியாலும் தந்தை வழியாலும் பரிசுத்த முடையவர்களும், நோயற்றவர்களும், அழகிற் சிறந்தவர் களும், பிரமசரியம் முடிந்தவர்களும், புத்தி, சீலம், பலம், குணம் ஆகிய நற்குணங்களையுடையவர்களும், என் கன்னிகையை விவாகம் செய்ய விருப்பமுடையவர் களுமான அந்தணர்களை யழைத்து வாருங்கள்'' என்றார். அவர்கள் ஆசிரமங்களிலும், கிராமங்களிலுமுள்ள அந்தணர்கள்பால் விரைந்து சென்று அறிவித்தனர்.

தேவலருடைய பெருமையையும் தெரிந்துகொண்டு பல முனிவர்கள் தேவலருடைய ஆசிரமத்தை யடைந்

தார்கள். தேவலர் வந்தவர்களை விதிப்ப வரவேற்று, மகளை நோக்கி "பெண்மணியே! இங்கு வந்த முனிவர் களும் முனிபுத்திரர்களும் உத்தம குண முடையவர்கள். வேத வேதாகமங்களை யுணர்ந்தவர்கள். ஆதலால் இவர் களில் தக்கவனை வரிப்பாயாக" என்றனர். உருக்கிய தங்கம் போன்ற மேனியுள்ள அவ்வுத்தமி, அவ்வந்தண சபையைப் பார்த்து வந்தனஞ் செய்து "இந்த சபையில் பொட்டையும் பொட்டையில்லாதவருமான பிராம்மண ரிருப்பாரேயாமாகில் அவரே எனக்குப் பதி" என்று கூறினாள். வெவ்வேறு தேயங்களில் இருந்து வந்த அம் மறையவர்கள் சுவர்ச்சலையின் வசனத்தைக் கேட்டு, ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு அவளை யறிவில் லாதவளென்று நினைத்து தேவல முனிவரை மனத்தில் இகழ்ந்துகொண்டு கோபித்து வந்த வழியாய்த் திரும்பிச் சென்றார்கள்.

பின்னர் ஒரு காலத்தில் நீதி நெறியில் நின்றவரும், சதுர்வேத பண்டிதரும், நற்குணங்களுக்குறைவிடமான வரும், பிரமசரியமுள்ளவருமான சுவேதகேது என்னும் தவமுனிவர் இவ்வரலாற்றைக் கேட்டு, ஆதரவுடன் கன்னிகையை விரும்பி வேகமாகத் தேவலரிடம் வந்து சேர்ந்தனர். உத்தாலக புத்திரராகிய அச் சுவேதகேது வைக் கண்டு தேவலர் முகமன் கூறி இருக்கச் செய்து மகளை நோக்கி, "பாக்கியவதியே! அறிவுள்ளவர்களிற் பெரியவரும், வேதவேதாகமங்களின் கரை கண்டவரும், பெரிய அறிவுள்ளவர்களிற் பெரியவருமான இம்முனிபுங்க வரை வரித்துக்கொள்" என்றனர். சுவர்ச்சலை அதைக் கேட்டுக் கோபங்கொண்டு முனிபுத்திரரை நிமிர்ந்து

பார்த்தாள். மாதவராகிய சுவேதகேது, அக்கன்னிகையை நோக்கி மொழிவாராயினர்.

''மாதரசியே! நான் உண்மையில் குருடனாயிருக்கிறேன். எப்பொழுதும் அவ்விதமே நினைத்துக்கொண்டிருக்கிறேன். அது போல ஐயமின்றி நீண்ட கண்ணுள்ளவனுமாக என்னை அறிந்துகொள். ஆதலால் பெண் மணியே! நான் உன்னை வரிக்கிறேன். இந்த உலகமானது எந்தக் கண்ணால் எப்பொழுதும் பார்க்கவும் அடையவும் அது போலத் தொடவும் மணத்தை யறியவும் பேசவும் செய்கிறதோ; எந்தக் கண்ணால் கர்மங்கள் செய்விக்கப் படுகின்றனவோ, எந்தக் கண்ணால் மனம் சங்கற்பிக்கவும் புத்தியானது உண்மையையறியவும் செய்கிறதோ அவ்வித ஆத்ம ஞானக் கண்ணில்லாதவன் பிறவிக் குருடனென்று சொல்லப்படுகிறான். எந்த ஞானக் கண்ணிருக்கும்போது பார்த்தும் கேட்டும் தொட்டும் மணத்தை யறிந்தும் இவ்வுலகம் செல்லுகிறதோ, அது போல எப்பொழுதும் எந்தக் கண்ணுடன் கூடியிருக்கிறதோ அந்தக் கண்ணானது எனக்கில்லை. ஆகையால் நான் குருடன்; அக்காரணத்தால் நீ என்னை வரித்துக் கொள். உலகதிருஷ்டியுடன் நித்திய நைமித்திக முதலிய கருமங்களை நான் செய்கிறேன். அவை யாவையும் ஆத்ம திருஷ்டியுடன் எப்பொழுதும் பற்றுதலில்லாமல் இருக்கும்படி செய்துகொள்ளுகிறேன். காரியமான பிரபஞ்சத்தையும் அதற்குக் காரணமான பரமாத்மாவையும் பாவித்துக்கொண்டு நான் சுமையில்லாதவனும் சாந்தனுமாயிருக்கிறேன். கருமத்தைச் செய்வதால் அழிவை விலகிக்கொண்டு வித்தையால் முத்திரூபமும், முத்தியே

அடையப்பட்டதுமான அந்த ஆத்மரூபத்தைப் பார்த்துக் கொண்டு இவ்வுலகில் பொறுமையில்லாமல் வசிக்கிறேன். உன் எண்ணப்படி நான் உனக்குக் கணவனாக ஆகிறேன். நீ என்னை வரித்துக்கொள்'' என்று கூறினார்.

சுவர்ச்சலையானவள் அறிவிற் சிறந்த சுவேத கேதுவை நோக்கி, ''தவசிலாக்கியரே! நீர் மனத்தால் வரிக்கப்பட்டவராகிறீர். மற்றக்கருமங்களைப் புரிபவர் எனது பிதா, அவரைக் கேளும். இது வேதத்தில் கூறிய விதி'' என்றனள். அதை அறிந்து அவள் தந்தையும் இந்திரியங் களை வென்றவருமான தேவலர் அவ்விதமே உத்தால கருடன் சுவேதகேதுவை நன்கு பூசித்து முனிவர்களின் எதிரில் ''என்னுடைய இந்தப் பெண்ணானவள் உமக்குப் பத்தினியாக இருக்கட்டும். உம்முடன் சேர்ந்து தருமங் களைச் செய்யும் பத்தினியாக அழகுள்ள கன்னிகையை உமக்குத் தருகிறேன்'' என்றுரைத்து சுவேதகேதுவுக்குத் தன் கன்னிகையைக் கொடுத்தார். சுவேதகேது சுவர்ச் சலையைப் பெற்றுக்கொண்டு விதிப்படி விவாகம் புரிந்து கொண்டு இல்வாழ்க்கையிலிருந்தார்.

பின்னர் தன் பத்தினியை நோக்கி, ''கட்டழகிற் சிறந்த காரிகையே. வேதங்களிற் சொல்லப்பட்ட கருமங்க ளனைத்தையும் என்னுடைய தருமபத்தினியாகிய நீ என்னுடன்கூட நியாயப்படி செய். நான் என்கிற எண்ணத் துடன் நான் இருக்கிறேன். அதுபோலவே நீயும் இருக் கிறாய். ஆதலால் கருமங்களைச் செய்; நானும் உன்னுடன் செய்கிறேன். அதன் பிறகு என்னுடைய தன்றென்ற எண்ணத்துடன் அந்தக் கருமங்களை ஞானமென்னுங்

தீயினல் எரிக்க வேண்டும். இவ்விதம் எப்பொழுதும் உன்ஞலும் என்ஞலும் செய்யவேண்டும். பரமாத்மாவினது சொருபத்தை அறிவினலுணர வேண்டிய, அவரை ஆதித்தனும், அக்கினியும், வாயுவும் அறிகிறதில்லே. அந்த பரமாத்மாவால் உலகம் நிறைந்திருக்கிறது. அவர் இந்த மனத்தில் இருந்துகொண்டு விளங்குகிருர்'' என்று சொன்னுர்.

இவ்விதம் நாயகனல் உபதேசிக்கப்பட்டு மகிழ்ச்சி யுற்ற சுவர்ச்சலே எப்பொழுதும் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டு தத்துவ ஞானத்தை யறிந்தவளுமா யிருந்தாள். அத்தம்பதிகளிருவரும் நித்திய நைமித்திக கருமங்களே எப்பொழுதும் நடத்தி எங்கும் நிறைந்துள்ள பரமாத்மாவிடம் கருமங்களே அர்ப்பணஞ்செய்து சந்ததி களே விருத்திசெய்து நெடுங்காலமிருந்து உத்தம கதியைப் பெற்ருர்கள்.

குலத்தளவேயாகும் குணம்

உலகத்திலே உயர் குலத்திற் பிறந்தார்களது செயலுங் குணமும் உயர்ந்திருக்கும். தாழ்ந்த குலத்திற் பிறந்தாருடைய செயலுங் குணமும் அவ்வாறே தாழ்ந்திருக்கும்; ஆதலாலே உயர்குடிப் பிறந்தாரோடு சேர்ந்து வாழ்வதனாலே உயர்வையும் பெருமையையும் பெறலாம்.

கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்

—ஔவையார்

உதாரணமாக மகாபாரதம் சாந்தி பருவத்திலுள்ள ஓர் உபாக்கியானத்தை எடுத்துக்காட்டுவாம். மனிதர்களில்லாத ஒரு பெரியவனத்தில், காய்கனி கிழங்கு இலைகளை ஆகாரமாகக் கொண்டவரும், இந்திரியங்களையடக்கினவரும், தவத்தினால் சரீரத்தை யுலர்த்தியவரும், சாந்தமுடையரும், பரிசுத்தரும், உபவாசங்களால் தூய்மையான ஆத்மாவுடையவரும், எப்பொழுதும் நல்வழியிலிருப்

பவரும், வேத மோதுவதைப் பொழுதுபோக்காக வுடைய வருமான அக்கினி பிரபன் என்கிற ஒரு தவமுனிவர் இருந்தார். அறிவிற் சிறந்த அந்த முனிவர் அமர்ந்திருப் பதைக் கண்டு அவ்வனத்தில் சஞ்சரிக்கும் சர்ப்பங்களும், சிங்கங்களும், மதங்களைப் பொழிகின்ற யானைகளும், பெரும் புலிகளும், காண்டாமிருகங்களும், கரடிகளும், பயங்கரத்தை விளைவிக்கும் மற்றுமுள்ள பிராணிகளும் அவரருகில் அன்புடனிருந்து கொண்டிருக்கும். உதிரத் தையே யுணவாகக்கொண்ட அந்த மிருகங்கள் யாவும் மாணவர்கள் போல அம்மாதவருடைய மனத்தை யறிந்து அவருக்குப் பிரியமானவைகளைச் செய்துகொண்டும் இருந்தன. முனிவர் சுகமா என்று கேட்டால் மறுமொழி யுரைத்த பின் அவைகள் சுகமாகச் செல்லும். கிராமத்தி லுள்ள ஒரு நாய் மாத்திரம் அவ்விடத்தில் அந்த முனிவரை விட்டுப் பிரியாமலிருந்து, பக்தியுடனும், கனிகிழங்குகளை ஆகாரமாகக்கொண்டும், சாதுவான சுபாவத்துடனும், உபவாசத்தால் உடல் மெலிந்த அந்நாய் முனிவருடைய கால்மாட்டில் நேயம் பூண்டிருந்தது.

ஒருநாள் கொடுமையுங் குரூரமும் மிகப் பயங்கரமும் உடைய ஒரு சிறுத்தைப்புலி கடுமையான பசியுந் தாகமுங் கொண்டு, அந்த நாயின் மாமிசத்தை விரும்பி மிகவும் கூச்சலிட்டுக்கொண்டும், அடிக்கடி நாவால் நக்கிக் கொண்டும், வாலையடித்துக்கொண்டும், வாயைத் திறந்து கொண்டும் காலாந்தகன் போல் அந்த நாயைக் கொல்லப் பாய்ந்து வந்தது. அவ்வாறு வரும் கொடுமையான புலி யைக் கண்டு நாயானது மிகவும் பயந்து உயிரை விரும்பி மாதவர்பால் விரைந்தோடிவந்து, "பகவானே! நாய்களுக்

குப் பகையாகிய இச்சிறுத்தைப் புலியானது என்னைக் கொல்லவோடி வருகிறது; இந்த வேளை என்னைக் காப்பாற்றவேண்டும்; தாங்கள் யாவுமறிந்த தவசிலாக்கியர். தங்கள் திருவடிக்கு அபயம்'' என்று மனங்கனிய வேண்டியது.

எல்லாப் பிராணிகளின் சப்தத்தை யறிந்தவரும், அணிமாதி அட்டமாசித்திகளை யடைந்தவருமாகிய அருந் தவர் அதன் துன்பத்தையுணர்ந்து உடனே மனமிரங்கி 'சுனகமே! வருந்தாதே; அஞ்சுந் தன்மையை விடுவாயாக. உன்னைக் காப்பாற்றுகிறேன். நாயின் வடிவத்தை விட்டு விலகி நீ சிறுத்தைப் புலி வடிவத்துடன் இருப்பாயாக'' என்றார். உடனே நாயானது சிறுத்தைப் புலி யுருவத்தை யடைந்தது. பொன் போன்ற வடிவமும், ஆச்சரியமான அங்கங்களும், கூர்மையான நகங்களும், கொண்டு (நாயாகிய) அச்சிறுத்தைப் புலி அச்சமின்றி அரண்யத்தில் வசித்தது. கொல்லவந்த சிறுத்தையும் இதைக் கண்டு பயந்து விரோதமின்றி விலகிவிட்டது.

பின்னர் மிகப் பயங்கரமானதும், திறந்த வாயுள்ளதும், பசியுடன் கூடியதும், அடிக்கடி வாயை நக்குகிறதும், உதிரத்தின்மீது பேரவாவுடையதுமாகிய ஓர் பெரிய புலி, இச்சிறுத்தைப் புலியை எதிர்த்து வந்தது. அதனைக் கண்டு பயந்து சிறுத்தைப் புலி முனிவரிடம் சரணமடைந்தது. முனிவர் கருணைகொண்டு, ''அஞ்சாதே. நீ, பெரிய புலியாக சத்துருக்களைவிடப் பலமுடையதாக ஆவாய்'' என்றனர். உடனே அந்நாயாகிய சிறுத்தைப்புலி பெரும் புலியாகவாயிற்று. எதிர்த்த புலியுமகன்றது. பிறகு பெரும்

புலியாக மாறிய அந்நாய் மாமிசத்தையே ஆகாரமாகக் கொண்டு காய்கிழங்குகளை விரும்பாமலிருந்தது. பிராணி களைக் கொன்று தின்று பருணசாலையின் அருகில் வசித் துக்கொண்டிருந்தது.

ஒரு சமயத்தில் கருமுகில்போற் கிளம்பியதும், மும் மதங்களைப் பொழிவதும், விசாலமான மத்தகத்துடனுயர்ந் ததும், பதுமமென்ற சுழியுடன் கூடியதும், நீண்ட தந்தங் களையுடையதும், மலை போன்ற சரீரமுடையதும், மேகம் போன்ற கம்பீரமான குரலையுடையதுமான ஓர்—கொழுத்த யானையானது அவ்விடம் வந்தது. அம்மத கரியைக் கண்ட (நாய்) புலியானது நடுநடுங்கிப் பயந்து தவமுனிவரைச் சரணமடைந்தது. உடனே முனிவர் அதனைப் பெரிய யானையாகச் செய்தார். எதிர்த்த யானையும் இதனைக் கண்டு வெருவி விலகிற்று. பின் யானையாயிருக்கும் அந்த நாயானது மகிழ்ந்து தாமரைக் கூட்டங்களிலும், சல்லரீ மரக் காடுகளிலும் சஞ்சரித்தது. தாமரைப் பூக்களிலுள்ள தூளிகளால் அலங்கரிக்கப்பட்டு வனத்திலுலாவுவதும் முனிவர் அருகிலிருப்பதுமாக இருந்தது. மலையின் குகையி லுண்டானதும், இன்பங்களுக்கு இயமன் போன்றதும், சிவந்த மயிர்களுள்ளதும், பயங்கரமானதுமாகிய பெரிய சிங்கமானது அவ்விடத்தில் வந்தது. அதைக் கண்டு இந்த யானை மிகவும் பயந்து நடுக்கமுற்ற சரீரத்துடன் முனிவரைச் சரணமடைந்தது. உடனே முனிவர் அதனை உயர்ந்த சிங்கமாக மாற்றினார். எதிர்த்து வந்த சிங்கம் ஒரே இனமாக இருப்பதால் குறைந்த பலமுள்ளதாகத் திரும்பிப் போயிற்று. அப்புதிய சிங்கம் சுகமாக முனிவரது பர்ணசாலையினிடத்திலேயே வசித்து வந்தது. அதனால்

அப்பொழுது உயிரில் விருப்பமுள்ள ஏனைய மிருகங்களும் பயந்து தபோவனத்தினருகில் காணப்படவில்லை.

பின்னர் ஒரு காலத்தில், எல்லா வுயிர்களையுங் கொல்லத்தக்கதும், இணையில்லாத ஆற்றலை யுடையதும், உதிரத்தையே யுணவாகக்கொண்டதும், எல்லாப் பிராணிகளுக்கும் அச்சத்தை விளைவிப்பதும் எட்டுக் கால்களை யுடையதுமான சரபமானது அந்நாயாகிய சிங்கத்தைக் கொல்ல வந்தது. சிங்கம் பயந்து, உள்ளம் நடுங்கி மாதவரை அஞ்சலி செய்து அடைக்கலம் புகுந்தது. முனிவர் அதனை வல்லபத்திற் சிறந்த சரபமாகச் செய்தனர். உடனே வனத்திலிருந்து வந்த சரபம் இப்புதிய சரபத்தைக் கண்டு அஞ்சியோடியது. பின் (நாய்) சரபமானது முனிவரிடம் அஞ்சுந் தன்மையின்றி சுகித்திருந்தது. அக்காட்டில் இருந்த மிருகங்களெல்லாம் இச் சரபத்தைக் கண்டு மிகவும் பயந்து திக்குகள் தோறும் ஓடின. அந்த சரபமுங் கனி கிழங்குகளை விரும்பாது எப்போதும் மாமிசத்தையே விரும்பி மிருகங்களைக் கொல்லுவதிலே முயன்றிருந்தது.

அற்ப குணமுடைய நாயாயிருந்து பலத்திற் சிறந்த உயர்ந்த குலத்திற் சேர்க்கப்பட்ட நன்றிகெட்ட அச்சரபமானது அடியிற் கண்டபடி ஆராய்ச்சி செய்வதாயிற்று. 'நான் இந்த முனிவரது மகிமையால் வாக்கு ஒன்றினல் மட்டும் எல்லாவுயிர்களுக்கும் பயத்தை யுண்டுபண்ணுவதும் அடைவதற்கரியதுமாகிய இச்சரப பிறவியை யடைந்துளேன். இம்முனிவரை யடுத்துப் பிழைக்கும் மிருகங்களும் பறவைகளும் ஏனைய பிராணிகளும் என்னிடம்

யயந்து நடுக்கமுந் துன்பமும் உள்ளவைகளா யிருக்கின்றன. உலகில் எல்லாப் பிராணிகளைவிட உயர்ந்த பலத்தையுடைய சரபத்தன்மையை ஒரு சமயம் அவைகளுக்கும் இவர் கொடுத்தாலுங் கொடுப்பர். பட்சிகளுக்கு கருடனுடைய பலத்தையும் இவர் தருவார். தன்னிடம் வந்த பிராணிகளுக்குக் கருணையினால் இன்னும் உயர்ந்த பிறவியையும் இவர் கொடுப்பார். அப்படி கொடுக்கா முன்னமே சீக்கிரத்தில் இந்த முனிவரைக் கொன்று விட்டால் நமக்கு எதிரிகளின்றி அச்சமும் ஐயமுமின்றி இவ்வரண்யத்தில் சஞ்சரிக்கலாம்' என்று ஆலோசித்தது.

உடனே அச்சரபத்தின் தீய எண்ணத்தை முனிவர் தவ வலியாலுண்டாகிய ஞானக்கண்ணாலுணர்ந்தனர். உணர்ந்தவுடன் சாபமளிக்கத் தொடங்கினர். "பிறகு முனிவரின் குலத்துதித்தவனும், அக்கினி பிரபனென்னும் பெயருடையவனுமாகிய நான் மனத்தால் உலகத்தை எரிக்கவும், தரிக்கவும் சக்திபெற்றவன்; தேவர்களும் சராசரமான எல்லா வுலகங்களும் எனக்கு வசப்பட்டிருக்கின்றன; இமையவர்களும் என்னிடம் பயந்து தமது த ரு ம த் தை விடாதவர்களாயிருக்கிறார்கள். தமது தருமத்தை விட்ட எவர்களையும் வார்த்தை ஒன்றினாலேயே எரித்துவிடுவேன். அடா! துன்பமில்லாத சரபத்தன்மையை என்னாலடைந்த நீ எம்மாத்திரம். எல்லாப் பிராணிகளுள்ளும் தாழ்ந்தும், கொடியதும், அசுத்தியுள்ளதுமான நாயாகிய நீ என்னால் ஆபத்துக் காலங்களில் சிறுபுலியாகவும், வேங்கையாகவும், மதங்கொண்ட யானையாகவும், சிங்கமாகவும், சரபமாவும் ஆனாய். நீ எனது கருணையினால் பலவிதமா யுண்டுபண்ணப்பட்டவனே யல்லாமல்

அந்தந்த குலத்திற் சேர்ந்தவனல்லன். ஏ பாபி! இரக்கமுடைய என்னையே கொல்ல விரும்பிய காரணத்தால் நன்றிகெட்டவனே! திரும்பவும் பழைய நாயாகவே இருக்கக்கடவது'' என்று சபித்தார். உடனே அத்தீய எண்ணமுடையதும், அவிவேகமுடையதும் ஆகிய சரபம் ''பழைய கறுப்பனே கறுப்பன்'' என்ற வசனப்படி நாயுருவத்தையடைந்து நாணத்துடன் நின்றது. ஆதலால் நற்குடிபிறந்தாருடன் கூடிப்பழகுதல் வேண்டும். நற்குலத்திற் பிறந்தானுடைய புத்தியானது தீய வழியிற் செல்லாது.

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.